கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(06.01.2019 - 06 தை 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 199, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05






புதுவருட நல்வாழ்த்துக்கள்

திருக்காட்சி திருவிழா
06.01.2019



இளையோர் அன்னை மரியாளின் முன்மாதிரிகையை பின்பற்றி இறைவனின் அழைப்பை ஏற்று உலகிற்கு நற்செய்தியின் மகிழ்வை அறிவிக்கும்படியாக...

திருத்தந்தையோடு இம்மாதம் முழுவதும் மன்றாடுவோம்

# மரியா, புதிய ஆண்டில் நம்முடன் வழிநடப்பாராக!



வருடத்தின் முதல் நாள் அதாவது தை மாதம் முதலாம் திகதி கடவுளின் தாய், புனித கன்னி மரியா என்ற விழாவை திருஅவை கொண்டாடுகின்றது. 1974ம் ஆண்டில், புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், Marialis Cultus எனப்படும் திருத்தூது கொள்கை வழியாக, தை முதல் நாளில் இவ்விழா சிறப்பிக்கப்பட வேண்டுமென அழைப்பு விடுத்தார். அதற்கிணங்க வருடத்தின் முதலாம் நாள் இவ்விழா பெருவிழாவாக சிறப்பிக்கப்படுகின்றது. திருத்தந்தை “கடவுளின் தாயான மரியா, இப்புதிய ஆண்டில், நம்மைப் பாதுகாத்து, நம்முடன் வழிநடப்பாராக, நம் இதயங்களிலும், உலகிலும், தம் திருமகனின் அமைதியைக் கொணர்வாராக” என செபித்தார். மரியாவைப் பற்றிய 4 விசுவாசக் கோட்பாடுகளில் “மரியா கடவுளின் தாய்” என்ற கோட்பாடே முதன்மையானதும் பழமையானதுமாகும்

## நீர்கொழும்பில் நத்தார் கரோல்

நீர்கொழும்பில் கடந்த மாதம் நடைபெற்ற நத்தார் நிகழ்வில் கலந்துகொண்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தனது உரையில் நத்தார் பெருவிழாவானது குழந்தைகளுக்கான பெருவிழா. குழந்தைகள் இறைவனால் கொடுக்கப்படுகின்ற கொடைகள். குழந்தைகள் எல்லோரும் நல்லவர்களே. சில வேளைகளில் நாம் தான் அவர்களை பிழையான வழிகளில் நடக்க வைக்கின்றோம். இவற்றைத் தவிர்த்து நல்ல குழந்தைகளாக அவர்களை உருவாக்க வேண்டும் என தம் உரையில் குறிப்பிட்டார். பேராயர் நத்தார் நிகழ்வுகளை பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

தகவல் : T. சுனில் பர்னாந்து





பயாகலை புனித சூசையப்பர் ஆலயத்தில் நத்தார் நள்ளிரவுத் திருப்பலியை பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை நிறைவேற்றுவதை படத்தில் காணலாம்.

## சமாதான நீதவான்



கிளரீசியன் சபையைச் சேர்ந்த குருவாகிய அருட்பணி. அன்ரன் சேவியர் தேவசீலன் அடிகளார், அகில இலங்கை சமாதான நீதவானாக, வத்தளை மாஜிஸ்ரேட் நீதிமன்ற நீதியரசர் புத்திக சீ. ராகல முன்னிலையில்

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## பொங்கலாய் பொங்க ...!




தீண்டாமைத் தீயை
நிரந்தரமாய்
அணைத்திட
பைந்தமிழ்த் தை
மகளே
பொங்கியே வருக!...

வன்முறை நீங்கிய
வளமான வாழ்வில்
பைந்தமிழ் தழைக்கவே,
ஏ.... தை மகளே
பொங்கலாய்ப் பொங்க.

உழவர் பெரு
மக்களுக்கு
நன்றி சொல்லும்
பெருவிழா இன்று
அறுவடைத் திருவிழா

ஆண்டுக்கு ஒரு முறை
அவர்களுக்கு நன்றி
சொல்லிவிட்டு
மற்ற காலங்களிலே
அவர்களை மறந்து
வாழும்
குறை தீர்ப்பாய் இறைவா!

உழைப்பவர்களின்
நெற்றி வியர்வையிலே
உன்னையே தரிசிக்கும்,
உந்துதல் தா! இறைவா

உழுவோரிலே உம்மைத்
தொழுது வணங்கும்
பாக்கியம்
தா....இறைவா

## இறைவனின் தாய்

இறைவனின் தாயே - அம்மா
ஆம் என மொழிந்தவளே - அம்மா
நீர் இல்லை என்றால் - இன்று நாமும் இல்லை

இறைவனின் வார்த்தையை
முழுமையாய் கடைப்பிடித்தவர்
உம்மை விட யாருமேயில்லை
“அம்மா” என உம்மை அழைக்கும் போது
என் மனம் குளிர்கின்றது, ஆறுதல் காண்கின்றது.

புதிய உறவொன்றை எமக்கு தந்தாய்
புது வழி காட்டி காத்து நின்றாய்
புதுமைகள் பலவும் புரிய வைத்தாய்
இயேசுவுக்கு புன்னகை புரிந்தே கற்றுக்கொடுத்தாய்

அம்மா! நீர் இறைவனின் தாயானதால் மகிழ்வு கண்டாய்
அம்மகிழ்வை எல்லோருக்கும் பகிர்ந்தாய்
எங்கள் மகிழ்ச்சியின் காரணமே
“அம்மா
புதிய வருடம், புதிய உணர்வுகள், புதிய உறவுகள்
இவை யாவும் நன்மையாய் அமைந்திட
அருளுமே எமக்கு வரமே தாயே!

P.M. மேரி பெனடிக்கா, பென்ரித் , அவிசாவளை

கொழும்பு உயர்மறைமாவட்டம் இவ்வாண்டை “இளைஞர்” ஆண்டாக பிரகடனப்படுத்துகின்றது. பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இம்மாதம் 13.01.2019 ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பு, பெரியதெரு புனித மரியாள் பேராலயத்தில் மாலை 5.00 மணிக்கு பிரகடனப்படுத்துகின்றார்.




ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள். (தி.பா 72)




# சமாதான நீதவானுக்கு பாராட்டு விழா





கொழும்பு அறிவெளி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலைவிழா கடந்த மாதம் முகத்துவராம் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்றது அமைச்சர் மனோகனேசன் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதில் அருட்தந்தை தேவசீலன் அடிகளாரையும் கௌரவித்து விருது வழங்குவதை நாம் காணலாம்.

**தகவல் : அருட்சகோ. டிலோப்ட்சன் பர்னாந்து, கண்டி, தேசிய குருமடம்**

# வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தின் புதுவருட திருப்பலி நிகழ்வுகள்



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் 01.01.2019 அன்று நள்ளிரவுத் திருப்பலி நடைபெற்றது. அன்றை திருப்பலியின் நிகழ்வுகளை படத்தில் காணலாம்.

**படங்கள் : மைக்கல் பர்னாந்து**

2019ம் ஆண்டு புதுவருட நள்ளிரவுத் திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களால் பல அருட்பணியாளர்களோடு இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்டது. பல துறவிகள் இறைமக்கள் இத் திருப்பலில் கலந்து செபித்தனர். பங்குத்தந்தை அருட்பணி.அ.ஞானப்பிரகாசம் அடிகளார் அனைத்து வழிபாடுகளையும் பங்கு பணிக்குழுக்களோடு இணைந்து ஒழுங்கமைப்புச் செய்திருந்தார்



# வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தின் பரிசளிப்பு விழா நிகழ்வுகள்



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் மறைப்பாடசாலை பரிசளிப்பு விழா 16.12.2018 அன்று நடைபெற்றது. அன்றைய நிகழ்வுகளை படத்தில் காணலாம். **படங்கள் : மைக்கல் பர்னாந்து**

# மனித சமுதாயம் அன்னையரால் உருவாக்கப்பட்டுள்ளது

**கடவுளின் தாயான மரியா, நம்மை உற்றுநோக்குவதற்கும், நம்மைத் தழுவிக்கொள்வதற்கும், தம் கரத்தால் நம்மை எடுப்பதற்கும் அனுமதிப்போம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புத்தாண்டு திருப்பலியில் கூறினார்.**

“கடவுளின் தாய், புனித கன்னி மரியா” விழாவான, தை 01, இச்செவ்வாய் காலை பத்து மணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பெத்லகேமில் குழந்தை இயேசுவைக் கண்ட இடையர்கள், அவரைப் பற்றிச் சொன்னவற்றைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர் (லூக்.2:18) என்ற லூக்கா நற்செய்தி திருச்சொற்களை மையப்படுத்தி மறையுரையாற்றினார்.

மரியாவால் வியப்படைய வேண்டும்

கடவுளின் தாயாகிய மரியாவால் நாமும் வியப்படைய வேண்டும் என்றுரைத்த திருத்தந்தை, மரியா, கடவுளின்தாய் மட்டுமல்ல, ஆண்டவரிடம் நாம் மறுபிறப்பு அடைவதற்கு நமக்கு வழியைக் காட்டுகிறவர் எனவும், மரியா யார் என்பது குறித்து, திருஅவையும் வியப்படைய வேண்டும் எனவும் கூறினார்.

## மரியா நம்மை உற்றுநோக்க அனுமதிக்க வேண்டும்

ஆண்டவரின் மணமகளாம் திருஅவை, வாழும் கடவுள் தங்கியிருக்கும் இடமாக இருந்து, தன் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் தாயாக இருக்க வேண்டும் என்று கூறியத் திருத்தந்தை, மரியா நம்மை உற்றுநோக்கும்போதெல்லாம், அவர் நம்மைப் பாவிகளாக அல்ல, மாறாக, பிள்ளைகளாக நோக்குகிறார் என்றார்.

மரியா நம்மை உற்றுநோக்க அனுமதிப்பதன் வழியாக, கடவுளின் அழகு மற்றும் விண்ணகத்தின் பிரதிபலிப்பை நாம் பார்க்கிறோம் எனவும், மரியாவின் உற்றுநோக்கல், இருள்அடர்ந்த மூலையில் ஊடுருவும் மற்றும் நம்பிக்கையை உயிர்த்துடிப்புள்ளதாக்கும் எனவும், திருத்தந்தை மறையுரையாற்றினார்.

மரியா நம்மை உற்றுநோக்கும்போது, அன்புக் குழந்தைகளே, துணிவோடிருங்கள், உங்கள் தாய் இங்கே இருக்கிறேன் என்று சொல்கிறார் எனவும் உரைத்த திருத்தந்தை, மரியா, தாம் வாழ்ந்த காலத்தில், கானாவூரில் புதுமணத் தம்பதியருடனும், எருசலேம் மாடியறையில் சீடர்களுடனும், எலிசபெத்தைச் சந்தித்தவேளையிலும் நடந்துகொண்டதுபோலவே, இன்றும் நம் ஒவ்வொருவரிடமும் நடந்து கொள்கிறார் என்று கூறினார்.

அன்னையர் தங்கள் குழந்தைகளைக் கையிலேந்தி, அவர்களுக்கு அன்போடு வாழ்வை ஊட்டுகின்றனர், ஆனால் இன்று எத்தனையோ பிள்ளைகள், தங்கள் வாழ்வைக் கையில் எடுத்துக்கொண்டு அலைந்து, தங்களின் வாழ்வுப் பாதையை இழந்து விடுகின்றனர் என்றுரைத்த திருத்தந்தை, அன்னையரின் வீரத்துவ வாழ்வு பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

மரியா, தம் கரத்தில் நம்மை எடுப்பதற்கு அனுமதிப்போம் என்று கூறியத் திருத்தந்தை, கடவுளுக்கும் ஒரு தாய் தேவைப்பட்டார், இயேசு, சிலுவையில் தொங்கிய வேளையில், மரியாவை, நமக்கு அளித்தார், எனவே மரியாவை, நம் வாழ்வில் வரவேற்க வேண்டும் என்று கூறினார்.

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
06 தை, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "ஒரு தாய்க்குரிய பாசத்தோடு என்றும் நமக்காக இயேசுவிடம் பரிந்துரைக்கின்றார் நம் அன்னை"

வாசக மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், ஆசீரையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"கடவுளே! எம்மீது இரங்கி ஆசி வழங்குவீராக. உம்திருமுக ஒளியை எம்மீது வீசுவீராக" (தி.பா 67:1)**

இந்த புது வருடத்தின் தொடக்கத்திலே இறைவன் நமக்கு புதுப்பொலிவையும், நம்பிக்கையையும் நிறைவாகத் தருவார் என்ற நம்பிக்கையுடன் நம்மையும் இவ்வாண்டு முழுவதையும், அவரிடம் கையளிப்போம். ஆண்டின் முதல் நாளை நம் தாய் மரியாள் உலகத்தின் தாயாக, கடவுளின் தாயாக விளங்கும் மரியாளுக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். எமது நாட்டில் உருவாகியிருக்கும் சூழ்நிலைகள் மாறி நல்லதொரு ஆட்சி அமைப்பு உண்டாகவும், எமது நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும்படி மன்றாடுவோம்.

தாய் மரியா தாய்க்குரிய பாசத்தோடு என்றும் நமக்காக இயேசுவிடம் பரிந்துரைக்க மன்றாடுவோம். தாய் மரியா நம்மை ஒருபோதும் அழியவிடமாட்டாள். இறுதிவரை காத்து நல்வழிப்படுத்துவார். அவரின் ஆசீரோடு புலர்ந்திருக்கும் புத்தாண்டில் புத்தொளி மலர்ந்து, புதுப்பொலிவுடன் மிளிர, புதுமனம் உள்ளவர்களாய், எமது நாட்டில், மனிதநேயம் கொண்டு, சமாதானத்துடன் வாழ முற்படுவோம்.

இம்மாதம் உழவர் திருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடுகின்றோம். இறைவனுக்கும் கால்நடைகளுக்கும், உழவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விழாவாகும். எமது நாட்டு மக்கள் பசியின்றி வாழ உழவர்கள் மனமுவந்து உழைக்கும் விளைநிலங்கள் பண்பட வேண்டிய மழை கிடைக்கும். நல்ல விளைச்சல் பெருகவும் இப்புதிய ஆண்டில் இறைவனை வேண்டி நிற்போம். மேலும் பத்திரிகையின் விலையேற்றம் பற்றி அறிந்திருப்பீர்கள். பொருட்களின் விலையேற்றம் கூடியிருப்பதால் இப்பத்திரிகையை அச்சிடுவதிலும் கூடிய செலவாகின்றது என்பதை அறியத்தருகின்றேன். கொழும்பு உயர்மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் ஒரே தமிழ் பத்திரிகை ஞானஒளி பத்திரிகையே. இதை வளர்த்தெடுப்பது கத்தோலிக்க மக்களாகிய உங்களுடைய பொறுப்பாகும். ஆகவே இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவருவதற்கு ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒரு குடும்பம் ஒரு பத்திரிகையை வாங்கினாலே இப்பத்திரிகையின் விற்பனை அதிகமாகும். இது உங்கள் கையில்தான் உள்ளது. பத்திரிகையை முன்னேற்றுவதற்கு பங்குத்தந்தையர்களும், பங்கு மக்களும் கூடிய கவனம் செலுத்தி விற்பனையை அதிகரிக்கச் செய்யுங்கள். அத்தோடு உங்கள் பங்கு திருவிழாக்கள், இறந்தவர்களின் நினைவுநாட்கள், திருமண சேவைகள் போன்ற விளம்பரங்களை கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஞான ஒளி இறைமக்கள் மனங்களில் குடிகொண்டு இறைபிள்ளைக்குரிய படிப்பினையை மேலும் கற்பித்து இறைவனில் மென்மேலும் நாமெல்லோரும் இணைந்து வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி நிற்கின்றேன்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# பிறக்கும் புத்தாண்டு







கடந்த கால கசப்பான அனுபவங்கள், துயரமான சம்பவங்கள் மறக்க முடியாத வேதனைகள், தனிமையில் தவித்த தருணங்கள், கண்ணீரில் கரைந்த நேரங்கள், உறவுகளை, உடன்பிறப்புக்களை இழந்த சோகங்கள், அனைத்தும் முடிவுபெற்று, புதிய வாழ்க்கையின் பாதையில் பயணிக்க பிறந்திருக்கிறது இப்புத்தாண்டு.

இறைவனின் இரக்கம் என்றும் பெரியது. அவரது இரக்கத்தினால் நாம் இயற்கையின் அழிவுகளிலிருந்தும், விபத்து ஆபத்துக்களிலிருந்தும், இன்றுவரை காப்பாற்றப்பட்டு, வந்திருக்கின்றோம். இப்புதிய வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் இறைவனின் மாபெரும் இரக்கத்தினால் எந்தவித துன்ப நிகழ்வுகளும் உலகத்தில் நடக்காமலிருக்க பாதுகாப்பாய் பிறக்கட்டும் இப்புத்தாண்டு.

கருணையும், அன்பின் செல்வந்தரும், படைப்பின் ஆண்டவருமான இறைமகன் இயேசுகிறிஸ்துவின் பாதையில் புண்ணிய பூக்கள் பூத்து குலுங்கிட, வறுமைகள் ஒழிந்து வளமைகள் பெருகிட, துன்பங்கள் ஓய்ந்து இன்பங்கள் பொழிய, சண்டை சச்சரவுகள் நீங்கிட, சமாதானம் வளர்ந்திட அன்பின் வடிவமாய் பிறந்திருக்கும் புத்தாண்டு அமைவதாக.

தரித்திரரும் ஆதரவற்றோரும், கைவிடப்பட்டோரும், நோயாளிகளும் புதுவாழ்வைகாண இறைவன் தன் சிறகுகளை விரித்து அவர்களின் பலவீனங்களையும், பாவங்களையும் மன்னித்து புதுவாழ்வு பெற்று மகிழ்ந்தசராக புலந்திருக்கும் இப்புத்தாண்டு

உலகில் வாழும் அனைத்து மக்களும், தமது அன்பைப் பகிர்ந்து பிறரன்பில் மகிழ்ந்து, இறையன்பில் நிறைந்து சமத்துவத்திலும், சகோதரத்துவத்திலும், வளர்ந்து உறவுப் பூக்களால் மலர்ந்து, ஒற்றுமை மாலையில் இணைந்து மனம் வீச புலந்திருக்கும் இப்புத்தாண்டு எல்லோருக்கும் நலமாக அமைவதாக.

வருடத்தின் முதல் நாளை இறைவனின் அன்னையாம் தாய் மரியிடம் ஒப்படைத்து தொடங்குவோம். இறைவன் நமக்கு கொடுத்த மாபெரும் கொடை நம் தாய் அன்னை மரியாள். அவ்வன்னையை போன்று அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அவர் வழியில் நடக்க வேண்டியது நம்முடைய பணியாகும். தாய் மரியைப்போல் இறைவனின் சித்தத்திற்கு ஏற்றாற்போல் நாமும் வாழ்த்தான் பிறந்திருக்கும் இப்புத்தாண்டு புதுப்பொலிவுமிக்க புதிய நம்பிக்கையையும், புதிய சிந்தனையையும் புதிய வழிமுறைகளையும் கொடுக்கிற ஆண்டாக இவ்வாண்டு அமையும். இதற்காக இறைவனிடம் மன்றாடுவோம்.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

✻✻✻

# உண்மை உரைக்கும்

கமிலஸ்

உங்களுக்கு சமாதானம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!



2019
புதுவருட நல்வாழ்த்துக்கள்

# மரியா இறைவனின் தாய்

தை 1



இன்னும் மண்ணில் பிறக்காத குழந்தை ஒன்று இறைவனிடத்தில் மிக உருக்கமாகக் கேட்டது, "நாளைய நாளில் நீர் என்னை மண்ணுலகிற்கு அனுப்பும் பட்சத்தில் ஒரு குழந்தையாக - நான் பிறக்கும் பட்சத்தில் - அங்கே எப்படி வாழ்வது?". அதற்கு இறைவன் "உன்னுடைய வருகைக்காக தேவதை ஒருத்தி காத்துக்கொண்டிருக்கின்றாள். அவள் உனக்குத் தேவையான அத்தனையும் பார்த்துக்கொள்வாள்" என்றார்.

"நான் மண்ணுலகிற்குப் போனபின்பு உம்மிடம் நான் பேச வேண்டும் என்று நினைக்கின்றேன். அப்பொழுது நான் என்ன செய்வது?" என்று கேட்டது அக்குழந்தை. "அதைப் பற்றி ஒன்றும் கவலைப்படாதே. உன்னுடைய தேவதை உன்னுடைய கைகளைக் கூப்பிவைத்து, உன்னை என்னிடத்தில் செபிக்க வைப்பாள். அதன்மூலம் நீ என்னிடத்தில் பேசிக்கொள்ளலாம்" என்றார் இறைவன்.

தொடர்ந்து குழந்தை இறைவனிடம், "இங்கே நான் பாதுகாப்பாக இருந்துவிட்டேன். ஆனால், நான் மண்ணுலகிற்குப் போனபின்பு எனக்கு ஆபத்து வருகின்றபோது என்னை யார் பாதுகாப்பார்?" என்று கேட்டது. அதற்கு இறைவன் மிகவும் அமைதியாக, "உன்னுடைய தேவதை உனக்கு எந்தவோர் ஆபத்தும் வராமல், ஏன் தன்னுடைய உயிரைத் தந்தாவது உன்னைப் பாதுகாத்துக்கொள்வாள்" என்றார்.

இறுதியாகக் குழந்தை தன்னுடைய முகத்தை மிகவும் சோகமாக வைத்துக்கொண்டு சொன்னது, "நான் மண்ணுலகிற்குப் போனபின்பு, உம்முடைய திருமுகத்தைக் காணமுடியாது போய்விடுமே! அப்போது உமது திருமுகத்தைக் காண்பதற்கு நான் என்ன செய்வது?"

"மண்ணுலகில் உனக்கென்று ஒரு தேவதை இருக்கிறாளே, அவர் உன்னை என் பக்கம் திருப்புவாள், உன்னை என்னுடைய திருமுகத்தைக் காணச் செய்வாள்" என்றார் இறைவன்.

குழந்தை சற்று பொறுமை இழந்து, "எதற்கெடுத்தாலும் தேவதை இருக்கிறாள், தேவதை இருக்கின்றாள் என்று சொல்கின்றீரே, யார் அந்தத் தேவதை?" என்று கேட்டது,

இறைவன் மிகவும் சாந்தமாக "அந்தத் தேவதை (உன்னுடைய) அம்மாதான்" என்றார்.

ஆம், இந்த மண்ணுலகில் நமக்காக இருக்கின்ற தேவதை, தெய்வம், இறைவி எல்லாம் 'அம்மா' தான். இந்த உன்னதத்தை உணர்ந்துதான் "இறைவன் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதால் தான் தாயைப் படைத்தார்" என்று யூதப் பழமொழி சொல்கின்றது.

இன்று தாயாம் திருச்சபை "மரியா இறைவனின் தாய்" என்னும் பெருவிழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றது. ஆண்டின் முதல் நாளான இன்று, அன்னையின் அடிதொட்டுத் தொடங்குவது உண்மையில் மிகப் பெரிய ஆசீர்வாதமாகும். இவ்வேளையில் இன்று நாம் கொண்டாடுகின்ற விழா நமக்கு எடுத்துரைக்கும் செய்தி என்ன? என்று சிந்தித்துப் பார்த்து நிறைவு செய்வோம்.

கி.பி 431ஆம் ஆண்டு, எபேசு, நகரில் நடைபெற்ற திருச்சங்கம் 'மரியா இறைவனின் தாய்' என்னும் விசுவாசப் பிரகடனத்தை அறிக்கையிட்டது. அன்றிலிருந்து இன்றுவரை மரியாவை இறைவனின் தாயாகப் பாவித்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்கள் முதல் நாளில் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

மரியா இறைவனின் தாயாகின்றபோது, இறைவனின் அன்புப் பிள்ளைகளாகிய நமக்கும் தாய் என்பதுதான் உண்மை. எனவே, ஒரு தாய்க்குரிய வாஞ்சையுடன் மரியா எப்படியெல்லாம் நமக்குத் துணை புரிகின்றார், நம்மை ஆசீர்வதிக்கின்றார் என்று இப்போது பார்ப்போம்.

இந்த உலகமே உயிருக்குப் பயந்து, (நம்மை விட்டு) ஓடிபோனாலும், ஓடிப்போகாத ஒரு தாய் மரியா என்று சொன்னால் அது மிகையாகாது. உரோமை அரசாங்கம் இயேசு கிறிஸ்துவின்மீது சிலுவையைச் சுமத்தி, கல்வாரி மலையில் அறைந்து கொன்றபோது, அவரோடு யாருமே இல்லை. மரியா மட்டும்தான் அவரோடு இருந்தார். அப்படியானால், இயேசுவோடு இறுதிவரைக்கும் இருந்த ஒரே சொந்தம் தாய் மரியா என்பதுதான் உண்மை.

இயேசுவோடு மட்டுமல்ல, நம்மோடும் இறுதிவரைக்கும் இருக்கின்ற ஒரே சொந்தம் தாய் (மரியா) என்பதுதான் அசைக்க முடியாத உண்மை. அதனால் தான் முன்னாள் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை இவ்வாறு சொன்னார்: "தாயைப் பெற்றிருக்கின்ற யாரும் ஏழை இல்லை" என்று. ஆம், நமக்கென்று ஒரு தாய் இருக்கின்றாள். அவள் நம்மை ஒருபோதும் விட்டு விலகிவிடாத தாய்! அவள் நம்மோடு இருக்கின்றபோது, நாம் ஒன்றும் ஏழைகள் இல்லை, மாறாக ஆசி பெற்ற மக்கள்!

மரியா தன்னுடைய மகன் இயேசுவுக்காக, இன்று நமக்காகப் பல்வேறு தியாகங்களை மேற்கொண்ட, மேற்கொள்ளும் ஒரு தியாகச் சுடர்! ஒரு குழந்தையைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி அழகு பார்ப்பதற்கு ஒரு சாதாரணத் தாய் எவ்வளவு தியாகங்களை மேற்கொள்கின்றாளோ, அவ்வளவு தியாகங்களையும் மேற்கொண்டவர் அன்னை மரியா. அது மட்டுமல்லாமல் தான் பெற்றெடுத்த மகன் தமக்காக வாழாமல், மனுக்குல மீட்புக்காகத் தம்முடைய வாழ்வைத் தியாகம் செய்தவர். அப்படிப்பட்ட தியாகச் செம்மலை ஈன்றெடுத்து, அவரை மனுக்குல மீட்புக்காகத் தியாகம் செய்த மரியாவின் தியாக உள்ளத்தை எப்படி வார்த்தைகளால் விவரித்துச் சொல்வது?

வழக்கமாகத் தாயின் தியாகத்தை பெலிக்கான் பறவையோடு ஒப்பிடுவார்கள். பெலிக்கான் பறவை தன்னுடைய குஞ்சுகளுக்கு இரை கிடைக்காதபோது, தன்னுடைய கூரிய, சிவந்த அலகினால் தன்னுடைய மார்பினில் குத்தி, அதிலிருந்து வழிகின்ற இரத்தத்தைக் கொண்டு குஞ்சுகளுக்கு உணவூட்டும். தாயும் கூட அப்படித்தான்! தன்னுடைய பிள்ளை நன்றாக இருக்க வேண்டும், வாழ்வில் உயர வேண்டும் என்பதற்காக தன்னுடைய உடலை வருத்திக்கொண்டு பல்வேறு தியாகங்களைச் செய்கின்றார். அதனால்தான் 'ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும், உழைத்தாலும் உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா?" என்று தாயின் தியாகத்திற்கு ஈடாக எதையும் கொடுத்துவிட முடியாது என்கிறார் கவிஞர் வாலி.

இப்படி நமக்காகப் பல்வேறு தியாகங்களை மேற்கொள்கின்ற, இறுதிவரைக்கும் உடனிருக்கின்ற தாய் அன்னை மரியாவைப் பெற்றிருப்பது உண்மையில் நாம் பெற்ற பாக்கியம்தான்! இந்த அன்னையின் அன்பு மக்களாக, அவருக்கு உகந்தவராக வாழ வேண்டும் என்றால், அந்த அன்னை நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். அது வேறொன்றுமில்லை. "அவர் (இயேசு) சொல்வதையெல்லாம் செய்வதுதான்" (யோவா. 2:5). நாம் இயேசு சொன்ன வழியில் நடக்கும் போது, நாம் அன்னையின் அன்பு மக்களாக மாறுவதோடு மட்டுமல்லாமல், இயேசுவின் அன்புச் சகோதர சகோதரிகளாக மாறுகின்றோம் என்பது உண்மையாகின்றது.

இறைவனின் தாய் என்னும் விழாவைக் கொண்டாடுகின்ற நாம், மரியா நம்மீது கொண்டிருக்கும் அளவுகடந்த அன்பினை உணர்ந்து, அவருடைய அன்பு மக்களாக வாழ முயற்சி செய்வோம். அதே நேரத்தில் இறைவனுடைய வழியில் நடப்போம். அதன் வழியாய் இறையருளை நிறைவாய் பெறுவோம்.

# அர்ப்பணித்தோம் எம்மையே அன்னைமரியின் பாதக் கமலங்களில்



இறைவன் கைவண்ணத்தில் உருவான
குகையிலா ஓவியமே
இறை இயேசு எண்ணத்தில் கருவான
இணையில்லா காவியமே
இறை ஆவி செயலாற்ற இடமளித்த
கறையிலா பேரெழிலே

ஆம் என்ற ஒரு வார்த்தை வீரமுடன்
சொல்லியே
அனைவரும் மீட்படைய பாதையமைத்த
தூய லீலியே
பரமனின் பகைவனை வீழ்த்திட்ட
விடியலின் கீதமே
நீரே எம் இதயத்தின் இன்னிசை நாதமே
உம் வார்த்தை தானே தாயே
எம் வாழ்வின் வேதமே
உம் அருளும் கருணையும் மட்டும்
எமக்கு போதுமே

வாள்களின் சத்தமுள்ள யுத்த களம்
இல்லை எனினும்
சவால்கள் நித்தம் உள்ள பணித்தளத்தில்
நீர் முன் செல்கிறீர் என்ற துணிவுடன்
எம் புனிதம் காத்திட பிறர் புனிதம் பேணிட
புறப்பட்டோம் படையணியாய்
பல்வகை பணியாற்றி
மறையுடலாம் திருச்சபையின் வளர்ச்சிக்காய்
மண்ணுலகில் இறையாட்சி மலர்ச்சிக்காய்
விண்ணகத் தந்தையின் மகிமைக்காய்
நற்செய்தி ஒளியில் பயணித்தோம்
உழைப்பின் களைப்பின்றி

விண்ணக நாட்டுக்குள் எம்மை
கரைசேர்க்கும் ஓடமே
உம் தூய ஆழங்காண முடியாத
அன்புநிறை இதயம் தனில்
எம் உடல் உயிர் ஆன்மாவை
சொல் செயல் சிந்தனையை
எண்ணம் உணர்வு நினைவுகளை
முயற்சி நம்பிக்கை எதிர்காலத்தை
முக்கால உடைமைகளை
எளிய எம் பணிகளை
அன்பு வாழ்வின் கனிகளை
எனை ஆளும் சக்கரவர்த்தினியே
நாம் உம்முன் சிறிய மெழுகுவர்த்தியாய்
இனி அர்ப்பணித்திட இதற்கு மேலாய்
எதுவுமில்லை என்று சொல்லி
வழிநடத்த வரம் வேண்டி அர்ப்பணித்தோம்.

ஆக்கம்:
பற்றீசியா

2019 புதுவருட நல்வாழ்த்துக்கள்

# திருக்காட்சிப் பெருவிழா

# இயேசு எல்லோருக்குமானவர்

## மார்கழி – 06





திருக்காட்சி என்பது மகிமைக்குரிய பேராற்றல் கொண்ட இறைவன் தம்மையே மனிதர்களுக்கு வெளிப்படுத்துவதையே, காட்சியளிப்பதையே குறிக்கி-ன்றது. படைத்தவர் தம்மையே படைப்பின் வழியாக பலவேளைகளிலே படைப்பின் சிகரமான மனிதருக்கு வெளிப்படுத்துவதை திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலே காண்கின்றோம்.

- மோயீசனுக்கு காட்சி கொடுத்தது
- ஆபிரகாமுக்கு மம்ரே என்ற இடத்தில் காட்சி கொடுத்தது.

இக்காட்சி நிகழ்வுகள் எல்லாம் திருவிழாவாகக் கொண்டாடப்படவில்லை. ஏன் மூன்று ஞானிகள் காட்சி பெற்றதை மட்டும் கொண்டாடுகின்றார்கள்?

முன்பு இறைவனின் காட்சியைப் பெற்றவர்கள் எல்லாரும் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமான யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். கீழ்த்திசையிலிருந்து பாலன் இயேசுவை தரிசிக்க வந்த மூன்று ஞானியரும் பிறஇனத்தவர்கள். மீட்பராம் இயேசு மெசியா யூத இனத்தவர்களுக்கு மட்டும் உரியவர் அல்லர். மனித குலம் முழுமைக்கும், பிற இனத்தாருக்கும் உரியவர் என்பதை இந்நிகழ்ச்சி குறிப்பதால்தான், அதற்கு இவ்வளவு முக்கியத்துவம் தரப்படுவதை பெருவிழா-வாகக் கொண்டாடப்படுகின்றது.

இஸ்ரயேல் மக்கள் தங்களை யாவே இறைவனின் பிள்ளைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்று உயர்வாகக் கருதியதால், பிற இனத்தவர்க-ளெல்லாம் கடவுளைச் சாராதவர்கள், கடவுள் தங்களை மட்டும் தான் அன்புசெய்கிறார், அவர்களை அன்பு செய்யவில்லை, அதனால் அவர்களை அழித்து தங்களுக்கு வாழ்வு கொடுக்கிறார் என்று எண்ணினார்கள். பிற இனத்தார் வேற்றுத் தெய்வங்களை வழிபட்டதால் கீழ்த்தரமானவர்களாக, தீண்டத்தகாதவர்களாக எண்ணப்பட்டு, யூதர்களால் புறக்கணிக்கப்பட்டார்கள். யூதர்கள் தங்களது இனத்தைச் சாராத மற்ற இனத்தவர்களை மட்டுமல்ல, தங்கள் இனத்தவர், அசீரிய, பபிலோனிய நாடு கடத்தலின்பேது அந்நியரோடு கலந்துபோய் குழந்தைகளைப் பெற்-றெடுத்ததால் அவர்களைச் சமாரியர்கள், யூத இரத்தம் தீட்டுப்பட்டு விட்டது என்று ஒதுக்கினார்கள். யாக்கோபின் 12 குலங்களிலே 11 குலங்கள் வேலையின் நிமித்தம் போர் மற்றும் பிற காரணங்களால் உலகின் பல நாடுகளுக்குச் சென்று குடியேறிய பிற அந்நிய இனங்களாகக் கலந்தன. மற்ற குலங்கள் பிற இனத்தவரோடு கலந்ததால் யூதரின் இனம் தன்னை மட்டுமே உயர்வானதாக, தூய்மையானதாக மெச்சியது. அதனால்தான் பிற இனத்தவரான அசீரியர்கள் வாழ்ந்த நினிவேவுக்கு மனம்மாறிட, நற்செய்தி அறிவிக்க முதலில் யூதனாகிய யோனா இறைவாக்கினர் தயக்கம் காட்டினார். எதிர்த்திசை நோக்கி கடலிலே பயணம் செய்தார். யூதனாகிய பேதுருவும் இயேசுவின் நற்செய்தி, விருத்தசேதனம் செய்த யூதர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட வேண்டும், அவர்கள் மட்டுமே கிறிஸ்தவ மதத்தைத் தழுவி மீட்பைப் பெறவேண்டும் என்று விரும்பினார். பேதுருவை மனம் மாற்றும் விதத்தில்தான் கடவுள் அவருக்குக் காட்சி கொடுத்து பிற இனத்தாரைக் குறிக்கக்கூடிய ஊர்வன, பறப்பன ஆகியவற்றை உண்ணச் சொல்லி பிற இனத்தாராகிய கொர்னேலியுவின் வீட்டிற்குப் போகச் சொல்லி, அவர்களுக்கும் திருமுழுக்குக் கொடுக்கச் செய்து, அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றினார்.

கீழ்த்திசை என்பது மெசபொத்தாமியா, ஈரான், அரேபியா ஆகிய நாடுகளைக் குறிக்கிறது. ஆகவே, வெவ்வேறு நாடுகள், பண்பாடு, கலாச்சாரம், வழிபாடு ஆகியவற்றைக் கொண்ட வெவ்வேறு நபர்கள் பாலன் இயேசுவைத் தரிசிக்க பெத்லகேமை நோக்கி வந்திருக்கலாம் என்கிறார்கள் விவிலிய வல்லுநர்கள். இவர்கள் மூன்று அரசர்களாக இருந்திருக்க முடியாது. மூன்று வானவியல் விஞ்ஞானிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் அல்லது அரசர்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடியவர்களாக இருந்திருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகிய மூன்று பரிசுகள் வழங்கப்பட்டால் மெல்கிஸ், பல்தசார், கஸ்பார் ஆகிய மூன்று ஞானியர்தான் பாலன் இயேசுவைக் காண வந்திருப்பார்கள் என்று சொன்னாலும், பரிசு கொணராமல் கூட நிறைய நல்ல மனிதர்கள் பாலன் இயேசுவைத் தரிசிக்க வந்திருக்கலாம் என்றும் எண்ணப்படுகிறது.

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகிய இஸ்ரயேல் நடுவில் யூத தேசமான பெத்லகேமில் பாலன் இயேசு பிறந்திருந்தாலும், உலக மக்கள் அனைவருக்கும் அவர் ஒப்பற்ற ஒளியாவார். இதைத்தான் இன்றைய முதல் வாசகத்திலே எசாயா இறைவாக்கினர் பாபிலோனிய அடிமைத்தனத்தால் துன்புற்ற எருசலேம் இஸ்ராயேலருக்கு ஆறுதலும், புத்துயிரும், நம்பிக்கையும் ஊட்டும் விதமாக கீழ்க்கண்ட வார்த்தைகளைச் சொல்லி உற்சாகப்படுத்துகிறார், திடப்படுத்துகிறார்.

மேலும் "எகிப்தியர் தம் செல்வத்தாலும், எத்தியோப்பியர் தம் வணிகப் பொருட்களோடும் நெடிது வளர்ந்து செபாவியரும் உனக்கு உடையவர்கள். அவர்கள் விலங்கிடப்பட்டு, உனக்குப் பின் வந்து உன்னைப் பணிவர். உன்னிடம் தம் மன்றாட்டைச் சமர்ப்பித்து இறைவன் உன்னிடம்தாம் இருக்கிறார், வெறெங்கும் இல்லை, வேறு கடவுளும் இல்லை" என்பார்கள் (எசா. 45:14) என்று எசாயா இறைவாக்கினரும், "எல்லா இனத்தாரும் அவருக்கு ஊழியம் புரிவர்" (திபா. 72:11) என்று திருப்பாடல் ஆசிரியர் தாவீது அரசரும் பாலன் இயேசுவின் பிறப்பிலோ எல்லா இறைவாக்குகளும் நிறைவேறுவதை அகமகிழ்ந்து கூறுகிறார்கள்.

கீழ்த்திசை ஞானியர் பாலன் இயேசுவைக் கண்டு ஆராதித்தது ஓர் அரும் அடையாளம், மறைபொருள்! யூதர்களுக்கு மட்டுமன்று, மக்களினத்தார் அனைவருக்கும் இயேசு அரசர் என்பதைத்தான் நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. இதைத்தான் புனித பவுலும் பிற இனத்தாராகிய எபேசியருக்கு எழுதிய திருமடலிலே பிற இனத்தாரும், யூதரும் ஓர் இனமாக கிறிஸ்து வழியாக ஒன்றிணைவதை அம்மறைபொருள். இருவரும் இயேசுவின் உடன் உரிமையாளர், ஒரே உடலின் உறுப்புகள், உடன் பங்காளிகள். இரு இனங்களும் வேறுபாடற்ற ஒரே சமூகமாக கிறிஸ்து வழியாக மாறிவிட்டது (எபே. 3:6) என்று குறிப்பிடப்படுகிறார் எசாயா. புனித பவுல் மட்டுமல்ல, இயேசுவே "நான் எல்லாருக்கும் உரியவன், யூதர்களுக்கு மட்டுமல்ல, பிற இனத்தாருடைய மீட்புக்காகவும் இவ்வுலகிற்கு வந்திருக்கிறேன்" என்று சொல்கிறார்.

தமது பணியின் தொடக்கதிலே "இஸ்ரயேலரிடத்தில் தொலைந்துபோன ஆடுகளை மட்டுமே மீட்க வந்தேன்" என்று சொன்னவர், "மருத்துவர் நோயற்றவர்களுக்கு அன்று, நோயுற்றவர்களுக்கே" என்று தமது பணியும், தாமும் பிற இனத்தாருக்கு என்பதை வலியுறுத்துகிறார். 'மேசையின் மீதிருந்து கீழே விழும் ரொட்டித் துண்டுகளை நாய்கள் உண்ணுமே' என்று தனது நம்பிக்கையின் ஆழத்தை வெளிப்படுத்திய பிற இனத்து பினிசிய கனானியப் பெண்ணையும், "நீர் ஒரு வார்த்தை சொல்லும், என் ஊழியன் குணமடைவான், நீர் என் வீட்டிற்கு வரத்தேவையில்லை" என்று தாழ்ச்சி, நம்பிக்கையின் ஒட்டுமொத்த உருவான பிற இனத்தானாகிய நூற்றுவர் தலைவனையும் பார்த்து, "இஸ்ரயேலரிடத்தில் கூட இந்த அளவுக்கு விசுவாசத்தைக் கண்டதில்லை" என்று மெச்சுகிறார்.

பிற இனத்தாராகிய சாரிபாத் கைம்பெண் வீட்டில்தான் எலியா இறைவாக்கினர் அவளது நம்பிக்கை மிகுதியால் கோதுமை மாவும், திராட்சை இரசமும், வற்றாமல் இருக்கச் செய்தார். பிற இனத்தா-னாகிய சிரியா மன்னனின் படைத்தலைவனாகிய நாமான் மட்டுமே எலியா இறைவாக்கினரால் தொழு-நோயிலிருந்து சுகப்படுத்தப்பட்டார் என்பதை இயேசு குறிப்பிட்டுச் சொல்லி கிழக்கிலும், மேற்கிலும் இருந்து மக்கள் வந்து விண்ணக விருந்தில் பங்கு பெறுவர் என்று பிற இனத்தாரும் இறை இயேசுவின் பிள்ளைகளே, அவர்களுக்கும் மீட்பு உண்டு என்பதை வெளிப்படுத்துகிறார்.

இயேசு ஆண்டவர் எல்லாருக்கும் சொந்தமா-தலால் இயேசு எனக்கு மட்டும், நமக்கும் மட்டும்தான் என்று கிறிஸ்தவர்கள் உரிமை கொண்டாடுவதற்குப் பதிலாக, அவர் எல்லோருக்கும் சொந்தம் என்று புனித பவுலைப் போல அவரை, அவரது நற்செய்தியை எல்லாருக்கும் அறிவிப்போம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு திருச்சபைக்கு வெளியிலே மீட்பு இல்லை என்று திருச்சபை போதித்தது. ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு இறையாட்-சிக்கு வெளியில் மீட்பு இல்லை என்று விரிந்த மனத்தோடு, விசாலப் பார்வையோடு தன்னை மாற்றிக் கொண்டது. ஏனென்றால் நல்லெண்ணம் கொண்ட நல்ல மனிதர்கள் எல்லாரும் எந்தவிதப் பாரபட்சமின்றி சாதி, மதம், மொழி, இனம் கடந்து, இறையாட்சியின் உறுப்பினர்கள் ஆகிறார்கள்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும், கைதிகளுக்கும் பெரிய வியாழன் சடங்கிலே பாதங்களைக் கழுவுமாறு உலகத் திருச்சபைக்கு அழைப்பு விடுத்தார். செய்தும் காட்டினார். ஐரோப்பிய,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



புதுவருட நல்வாழ்த்துக்கள்

# பொங்கல் விழா




பண்டைய காலத்திலே விழாக்கள் எல்லாம், மதம் சார்ந்தவையாக இருந்தன. ஆனால் தமிழர்கள், நீண்டகாலமாக மதம், கடவுள் சார்பின்றி உழவையும், உழவரையும், உழவுக்கு உறுதுணையாக இருந்த கால்நடைகளையும், மையமாக வைத்து பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். சூரியனையும், மழையையும், மற்றும் பூமித்தாயையும், நினைத்துப் பார்த்து நன்றி தெரிவிக்கும், விழாவாக இருக்கிறது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம், வாடுகின்ற உயரிய பண்பாட்டை எடுத்தியம்பும் விழா இது. உணவு கொடுத்து உயிர்காக்கும், உழவுத் தொழிலே முதன்மையான தொழில் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். தமிழர்கள், உழவர்கள், உழவுக்கு உறுதுணையாக இருந்த கால்நடைகள் மற்றும் பூமி இவற்றில் இறைத்தன்மையைக் காண்பவர். ஆனால் உழவுத் தொழிலைத் தீண்டாத தொழில் என நினைத்தவர்களும் இருக்கிறார்கள். இன்றும் இந்த சிந்தனை பலரிடமும் இருக்கிறது. உழவர்கள் எவ்வளவுதான் உழைத்தாலும் வறுமை அவர்களைக் கொல்லுகிறது. கடன் தொல்லைகளாலும், போதிய விளைச்சல் கிடைக்காமலும், சொத்துக்களை இழக்கிறார்கள். அடுத்தவரின் அன்றாடப் பசியை நீக்கிட, நலத்தையும், வளத்தையும், வாரி வழங்கிய விவசாயிகள், வாழ்வு வறண்ட நிலமாக இருக்கிறிது. ஏன் இந்த நிலமை? சிந்திப்போம், செபிப்போம்.

## விவிலியம் காட்டும் பொங்கல் விழா

விவிலியத்தில் காணும் ஒவ்வொரு அறுவடை விழாவும், இஸ்ரயேலர் விடுதலை உணர்வை வளர்த்தது. அதுபோல நமது அறுவடை விழாவும், விசுவாசிகளின் விடுதலைக்கான விழாவாக மாறிட சிந்திப்போம், செபிப்போம்.

ஏழாம் ஆண்டும், உன் நிலத்தை ஓய்வு கொள்ளவும், தரிசாகக் கிடக்கவும், விட்டுவிடு. உன் மக்களில் வறியவர்கள், அதில் தானாக விளைவதை உண்ணட்டும். (விப. 23:11).
மண்நேயமும், மனித நேயமும், நாளும் நாம் வளர்த்திட சிந்திப்போம், செபிப்போம்.

நீங்கள் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது வரம்பு ஓரக் கதிரை அறுக்க வேண்டாம். சிந்திக் கிடக்கும் கதிரையும், திராட்சைத் தோட்டத்தில், சிந்திக் கிடக்கும், பழங்களைப் பொறுக்க வேண்டாம். அவற்றை எல்லோருக்கும், அன்னியருக்கும் விட்டுவிட வேண்டும் (லேவி 19:9-10, 23:11). எளியோரும், அன்னியரும் வாழ்வு பெற்றிட சிந்திப்போம், செபிப்போம்.

உன் வயலில் விளைச்சல் அறுவடை செய்யும்போது அரிக்கட்டினை மறந்து வயலிலே விட்டடுவந்தால், அதை எடுக்க திரும்பிப் போகாதே. அதை அங்கிருக்கும் அனாதைக்கும், கைம்பெண்ணுக்கும் விட்டுவிடு (இ.ச. 24:19). அனாதைகளையும், கைம்பெண்-களையும் அரவணைத்து காத்திட சிந்திப்போம், செபிப்போம்.

மக்களிடையே காணியாட்சி நிலம் இல்லாதவர் இருக்கக் கூடாது. சகோதரருள், ஒருவர் ஏழ்மைக்கு உட்பட்டு அவருடைய சொத்தில், எதையேனும் விற்றால், யூபிலி ஆண்டில் அவர் தம் நிலபுலங்களுக்குத் திரும்பிவர அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் (லேவி. 25:23) தேவைகள் உள்ளோரை நாளும் கண்டிட சிந்திப்போம், செபிப்போம்.

ஆகவே உழவையும் உழைப்பையும், வார்த்தை-களால் அன்றி வாழ்க்கையால், அர்த்தப்படுத்துகின்ற நாளாக பொங்கல் திருநாள் அமையட்டும். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உழவர்களை நன்றியோடு நினைப்போம். உழவுக்குத் தேவையான விளை நிலங்களையும், கால்நடைகளையும், இயந்திரங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம். உழவர்கள் வாழ்வு சிறக்க வாழ்த்துகிறோம்.



# புதிய பார்வையில் புதுப்பயணம்

### “நான் பயந்தேன், ஆனால் அதைச் சந்தித்தேன்”

நம் வாழ்வில் நமக்கென்று சில பயங்களை வைத்திருக்கின்றோம். தோல்வி பற்றிய பயம், மாற்றம் பற்றிய பயம், பிறர் நம்மைத் திருத்தும்போது ஏற்படும் பயம், நம் தவறு கண்டுபிடிக்கப்படுமோ என்று பயம், நமது சமுதாயத்தில் அல்லது வேலை செய்யும் இடத்தில் பயம் நம்மிடம் இருக்கும்போது அவை நம்மைச் செயல்பட அனுமதிப்பதில்லை.

**நிகழ்வு :** ஓர் இளைஞனின் வாழ்வில் நடந்தது இது. மார்க்கட்டிங் மேனேஜராக ஒஜ சிறந்த கம்பெனியில் சேர்ந்தான். சேரும்போதே ஒரு வியாபாரி சில தவறான வழிமுறைகளைப் பின்பற்றுவது பற்றி சொன்னார்கள். தலைமை நிர்வாகிகளுக்கும் அவருடைய செயல்பாடுகள் பற்றித் தெரியும். ஆனாலும் வியாபாரிகளில் பெரிய பணக்காரரான அவரை இழந்துவிட மனமின்றி அவரை எதிர்த்து நிற்க யாரும் துணியவில்லை.

இந்த நபரைக் குறித்து எல்லோருக்கும் பயம் உண்டு. அவர் ஆர்டர் கொடுக்கும்போது பலவிதமான நிபந்தனைகளைப் போடுவது உண்டு. மார்க்கட் விலையைவிடக் குறைவான விலைக்கு வாங்கவேண்டும் என்பார். சரியான நேரத்தில் பணத்தை அமைப்பதும் இல்லை. எத்தனையோ சீனியர் நிர்வாகிகளையும் சமாளித்திருக்கிறார்.

இளைஞன் புதிதாக வேலையில் சேர்ந்திருந்தான். நேரடியாக இந்த முதலாளியிடம் மோதவேண்டி வராது. ஒரு நாள் சனிக்கிழமை மாலையில் ஆபீஸ் வேலைகள் எல்லாம் முடிந்து திரும்பும் வேளையில் போன் வந்தது. ஓர் ஆர்டரை ரிலீஸ் செய்துவிடவேண்டும் என்று சொன்னார். எல்லா நிர்வாகிகளும் போய்விட்டனர். பணிவோடு இளைஞன், “ஐயா திங்கள் காலையில் பெரிய மானேஜிங் டைரக்டரிடம் பேசித்தான் தீர்மானிக்க முடியும். என்னால் இதைச் செய்யவே முடியாது” என்று சொன்னான். எவ்வளவு தாழ்மையுடன் சொன்ன பிறகும் சத்தம் போட்டார். வேலை போய்விடும் என்று மிரட்டினார்.

பல சீனியர் பணியாளர்கள் இவரால் வேலை இழந்தது அவனுக்குத் தெரியும். இதற்கு முந்தின மேனேஜர் கூட ஒரு காரை இலஞ்சமாக வாங்கி ஏதோ செய்ததாக குறைச்சொல் இருந்தது. சில மாதங்களுக்கு முன்புதான் வேலையில் சேர்ந்திருக்கும் இளைஞன் இவன், இவனை நம்பியிருக்கும் பெரிய குடும்பம், வேலை தேடித்தேடி அலைந்து சோர்ந்த நாட்கள் அனைத்தும் இவனை அச்சுறுத்தின. இவனை வேலையிலிருந்து விரட்டி விடுவதாக அச்சுறுத்தும் இந்த வியாபாரியை எப்படிச் சந்திப்பது என்று தெரியவில்லை. அவர் சொன்னதைச் செய்தால் அது கண்டுபிடிக்கப்பட்டால் கம்பெனி இவரைக் கண்டிப்பாக வெளியில் அனுப்பிவிடும்.

பெற்றோர் உடன்பிறந்தோரின் சோகம் இவனை இன்னும் அதிகமாக அச்சுறுத்தியது. பயத்தைச் சந்தித்துவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. எல்லாவித பயத்தையும் உதறிவிட்டு சூழ்நிலையைச் சந்திக்கத் தீர்மானித்தான்.

“ஐயா தயவுசெய்து எனக்குச் செவிகொடுங்கள் எனக்கு என்ன நடப்பதானாலும் நீங்கள் சொல்லுவதை என்னால் செய்யவே முடியாது. நான் வருந்துகிறேன். நீங்கள் சொல்வதை திங்கள்கிழமைதான் நிறைவேற்ற முடியும்” என்று சொல்லிப் போனை வைத்துவிட்டான்.

திங்கள்கிழமை சீக்கரமே வேலைக்கு வந்து நடந்ததைத் தெளிவாக முதலாளியிடம் சொன்னான். எப்படியும் இவனுக்கு வேலை போய்விடும் என்று உடன் ஊழியர்கள் பேசிக்கொண்டார்கள். அவனை ஆறுதல்படுத்த முயன்றார்கள். இவனோ பயத்தை வென்றுவிட்டவனாய் வருவது வரட்டும் என்று துணிவுடன் இருந்தான். செவ்வாய் அந்த வியாபாரி வந்து முதலாளியிடம் பேசின பிறகு இளைஞனை உள்ளே அழைத்தனர்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

2019 புதுவருட நல்வாழ்த்துக்கள்



# இறைவார்த்தை வழிபாடு

▶▶ பேதுரு ◀◀

## ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா (06.01.2019)

**வாசக விளக்கம்:** மெசியாவாகிய ஆண்டவரின் திருக்காட்சி விழாவில் பங்கேற்க வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! இயேசு பிறந்தது யூதர்களுக்காக மட்டுமல்ல அனைத்துலக மக்களுக்காகவுமே என்பதை இன்றைய விழா சுட்டிக்காட்டுகின்றது. இன்றைய நற்செய்தியில் வரும் ஞானிகள் தேடல் மிகுந்தவர்கள் அவர்களின் தேடல் இறைவனின் காலடியில் முழுமை பெற்றது. மண்ணுலக அரசரைத் தேடி வந்தவர்களுக்கு விண்ணக அரசரின் காட்சி கிடைத்தது. இவர்கள் மறைநூல் அறிஞர்கள் அல்ல, தோராவை புரிந்து கொண்டவர்களும் அல்ல, மாறாக, புற இனத்தவர் என்றும் ஒதுக்கப்பட்டவர்கள் என்றும் கருதப்பட்டவர்கள். எனவேதான் இயேசு அனைத்துலக மக்களுக்கும் உரித்தானவர் என்ற செய்தி நமக்குத் தரப்படுகின்றது. ஏரோது மெசியாவை தனக்கு எதிரானவர் என்று நினைத்து அவரைக் கொல்ல வழி தேடினான். ஆனால் ஞானிகளோ இயேசுவை மெசியாவாக ஏற்று அவரை வணங்கத்தேடினர். இந்நிலையில் நமது தேடல்கள் எவ்வாறு உள்ளன. நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசுவைத் தேடி வருவோமா?

**முதல் வாசகம் : எசாயா 60:1-6**
ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்.

**இரண்டாம் வாசகம் : எபேசி 3:2-3, 5-6**
பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளர் என இப்போது வெளியாக்கப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! ஆண்டவரின் விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கின்றோம் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 2:1-12**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவனின் வெளிப்பாட்டை எடுத்துரைக்கும் திருக்காட்சி விழாவை சிறப்பிக்க எம்மை அழைக்கும் திருஅவையையும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலை ஊழியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அவர்கள் அனைவரும் வழிகாட்டும் விண்மீன்களாகத் திகழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

நாட்டு மக்கள் அனைவரதும் தேவைகளை தேடிக்கண்டு பிடித்து நீதிநெறி வழுவாமல் நாட்டை வழிநடத்தும் நல்ல தலைவர்கள் உருவாகவும், அனைவரும் ஏரோதன் போல் சுயநலம் பாராது, பொதுநலம் பேணவும், உண்மையைத் தேடுவோராய் நன்மைகள் செய்யவும் வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

தாழ்வும், சிறுமையும், அறியாமையும், அடிமைத்தனமும் கொண்ட இருளின் மக்களாக வாழாமல் வீரமும், விவேகமும், நம்பிக்கையும் கொண்ட ஒளியின் மக்களாக நாம் வாழவும் 'காலம் நெருங்கி விட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்' என்ற வார்த்தையை ஏற்று நாம் வாழவும் வரமருள வேண்டுமென்று...

## ஆண்டவரின் திருமுழுக்கு (13.01.2019)

**வாசக விளக்கம்:** ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கு விழாவைக் கொண்டாட வந்திருக்கும் இறைமக்களே! இயேசு திருமுழுக்குப் பெற்றபோது "என் அன்பார்ந்த மகன் நீரே உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன் என்னும் கடவுளின் சான்று அவரை உலகிற்கு அடையாளம் காட்டியது. தந்தையாம் இறைவன் அவர்மீது தம் ஆவியைப் பொழிந்து அபிஷேகம் செய்து அவரை உலகின் மீட்பராக அறிமுகம் செய்கின்றார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற வந்த மைந்தன் இயேசு தந்தையால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை செய்வதற்கு உடலிலும் உள்ளத்திலும் உறுதிபெற பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ள யோவானின் கரத்தால் திருமுழுக்கு பெறுகின்றார். திருமுழுக்கைப் பெற்றுக்கொண்ட நாம் பரிசுத்த ஆவியின் ஆலயங்களாக வாழ்கின்றோமா எனச் சிந்திக்க இன்றைய வழிபாடு நம்மை அழைக்கின்றது. யோவானிடமும், இயேசுவிடமும் விளங்கிய தாழ்ச்சி எம்மிடமும் விளங்க இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எசா 40:1-5,9-11**
ஆண்டவரின் மாட்சி வெளிப்படுத்தப்படும், மானிடர் அனைவரும் இதைக் காண்பர்.

**பதிலுரைப் பாடல் :**
என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு

**இரண்டாம் வாசகம் : தீத்து 2:13-14:3,4-7**
புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் தம்மை மீட்டார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்கு கொடுப்பார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 3:15-16, 21-22**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைமக்களோடு இணைந்து இயேசுவின் திருமுழுக்கு விழாவைக் கொண்டாடும் திருஅவையையும் அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரையும் ஆசீர்வதிக்கவும் இவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட பணி வாழ்வை பொறுப்புடனும், விழிப்புடனும் செயலாற்ற வேண்டிய வரங்களை இவர்கள் மீது பொழிந்தருள வேண்டுமென்று...


எமது நாட்டை வழிநடத்துவோரும் தலைவர்களும் இயேசுவைப் போல எளியோர் ஏழைகள் மீது பரிவுகொள்ளவும் ஆதரவு அற்றோரை அரவணைக்கவும், சமூக அநீதிகளை சுட்டெரிக்கும் கதிர்களாக செயலாற்றவும், நோயுற்றோரை குணமாக்கும் கரங்களாக மாறவும் வேண்டிய வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

திருமுழுக்கு யோவானிடமும், இயேசுவிடமும் விளங்கிய தாழ்ச்சியை நாம் கைக்கொள்ளவும் இயேசுவிடம் விளங்கிய செப வாழ்வைப் பின்பற்றவும், இவரே என் அன்பார்ந்த மகன் என்ற வாழ்த்தொலியை நாமும் பெற்றிடவும், தந்தையாம் உமது திருவுளத்தை ஏற்று நாம் வாழவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

# விவிலிய வாசிப்பு

## பழைய ஏற்பாடு

07



### அ. வார்த்தைகளில் ஒழுங்கு

இஸ்ராயேல் மக்களின் நம்பிக்கையில் எண் ஏழும் அதன் மடங்கும் ஒரு முக்கியமான கருத்தாக்கமாகும். அது முழுமையை, நிறைவைக் குறிக்கும். யூதர்களின் ஏழு திரியுள்ள விளக்குத் தண்டு, ஏழு முறை, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு வரும் யூபிலி ஆண்டு ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம். இந்த வகையில் தொடக்க நூலின் முதல் அதிகாரத்தில் ஏழும் அதன் மடங்குகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. கீழ்க்காணும் கருத்துக்கள் அனைத்தும் எபிரேய விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு கூறப்படுகின்றன. தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்புகளில் வித்தியாசங்கள் இருக்கலாம்.

- ❖ எபிரேய மொழியில் தொடக்க நூலின் முதல் வசனத்தில் ஏழு வார்த்தைகள் உள்ளன. இரண்டாம் வசனம் ஏழின் இரு மடங்கான பதினான்கு வார்த்தைகளைக் கொண்டுள்ளது.
- ❖ இதே பகுதியில் கடவுள் என்னும் வார்த்தை 35 முறை (75)யும், மண்ணுலகு 21 (73) முறையும், விண்ணுலகு மற்றும் வானம் 21 (73) முறையும்,
- ❖ கடவுள் நல்லது என்று கண்டார் என்பது ஏழு முறையும் (வச 4,10,12,18,21,25,31) கடவுளின் திருவுளம் அல்லது வார்த்தை நிறைவேறுகின்ற அது அவ்வாறே ஆயிற்று (வச 3,7,9,11,15,24,30) என்பதும் ஏழு முறையும்,
- ❖ கடவுள் செயல்படுவதாகக் கூறுகின்ற வசனங்கள். (வச 4,7,12,16,21,25,27), ஒவ்வொன்றையும் படைத்த பிறகு பெயரிடுதல் அல்லது ஆசி வழங்குதல் ஆகியவையும் ஏழு முறை (வச 5 (இருமுறை) 8,10 (இருமுறை) 22,28 காணப்படுகின்றன.
- ❖ ஒருசில அறிஞர்களின் கணிப்பில் இப்பகுதி 2-3இல் முடிகின்றது. அதன்படி பார்த்தால் இப்பகுதி 35 வார்த்தைகளை (அதாவது ஐந்து முறை ஏழு) கொண்டு முடிகிறது.

சுருங்கக் கூறின் தொடக்க நூலின் தொடக்கமே எங்கும், எதிலும் முழுமை என்பதாக அமைந்து இயற்கை முழுமையானது, நிறைவானது, குறைகளற்றது என்னும் உயரிய கருத்தை நமக்கு அளிக்கின்றது.

### ஆ. மானிடப் படைப்பு

படைக்கப்பட்ட பொருட்களிலும், படைக்கப்பட்ட விதத்திலும் மானிடரின் படைப்பை மட்டும் வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றார் விவிலிய ஆசிரியர். தொ.நூ 1:24 வரை படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தையும் தமது வார்த்தையினால் படைத்தார் இறைவன். இதன்படி இறைவனின் வார்த்தைக்குப் படைக்கும் ஆற்றல் உண்டு (காண். எசா 55:10-11) என்பதோடு இவை அனைத்தையும் எளிதாய், அரிய முயற்சி இன்றி படைத்தார் என்னும் கருத்தும் தெளிவாகிறது. அவர் உச்சரிக்க அவைகள் உருவாகின்றன. ஆனால் மானிடரைப் படைக்கும்போது இறைவன் சில முயற்சிகளை எடுக்கிறார், சிரமங்களை மேற்கொள்கிறார், சில சிறப்புக்களைத் தருகின்றார்.

1. படைப்பின் உச்சத்தில் மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் (நிலம், நீர், ஒளி, உணவு) ஏற்படுத்திய பின் மானிடரைப் படைக்கின்றார்.
2. இந்த உலகம் மானிடருக்காகப் படைக்கப்பட்டது, உலகுக்காக மானிடம் படைக்கப்படவில்லை. இதுவும் மானிடரின் சிறப்பைக் காட்டுகின்றது.
3. மனிதனைப் படைக்கும் முன் ஆலோசனை செய்து, யோசித்து இறைவன் தம் உள்ளத்தில் தீர்மானித்துச் செய்கின்றார். மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம் (வச 26) சில அறிஞர்களின் கருத்துப்படி உண்டாக்குவோம் என்னும் வார்த்தையில் உள்ள பன்மை விண்ணகத்தில் உள்ள தூதர்களைக் குறிப்பதாக்க கொண்டால் (திபா 8:5) இறைவன் தம் விண்ணக அவையில் கலந்து ஆலோசித்து இந்தத் தீர்மானம் செய்கிறார்.
4. மற்ற எந்தப் படைப்புப் பொருட்களுக்கும் இல்லாத ஒரு சிறப்பு மானிடருக்கு உண்டு. அதாவது அவர்கள் இறைவனின் உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்டு உள்ளனர் (வச 26,27). இவற்றை உரு, சிலை வார்ப்பு போல, ஒன்று போல என்று மொழி பெயர்த்தாலும், இது எதில் அடங்கியிருக்கிறது என்பதில் அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துகள் உள்ளன. அருள், பெருந்தன்மை, மாண்பு, மாட்சிமை, மேன்மை (தி.பா 8:5) நிறைவு, ஞானத்தின் நிறைவு, அழகின் முழுமை (எசே 28:12) என பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. எனவே மானிட அழகையும் கடவுளின் சாயலின் ஒரு சிறு பிரதிபலிப்பாகக் கொள்ளலாம்.
5. இறுதியாக மேற்கூறிய இறை உருவம், சாயல் என்பதைப் பற்றிய புரிந்துணர்வில் எத்தகைய ஒத்த கருத்து ஏற்படாவிட்டாலும் குறைந்த பட்சம் இவை இரண்டும் எதற்காக மானிடருக்கு அளிக்கப்பட்டது என்பதை விவிலிய ஆசிரியர் தெளிவாக்குகின்றார். மானிடர் இருப்பது இறைவனின் பதிலாளியாய் இருந்து இந்த உலகை ஆள்வதற்கும் (வச 26), ஆற்றலுக்கு உட்படுத்துவதற்கும்தான்..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# ஆசிய மறைப்பரப்பாளர்களுள் தலைசிறந்து விளங்கும் "தூய ஜோசப்வாஸ்"











சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ,
தேசிய குருமடம், கண்டி.

**"உந்தன் வழியை பின்பற்றும் உந்தன் பிள்ளைகள் நாம் உம் வழி வாழ அருள்புரி புனிதனே"**

"இலங்கையின் அப்போஸ்தலர்" என்று வர்ணிக்கப்படும் தூய ஜோசப்வாஸின் திருவிழாவை தை மாதம் 16ம் திகதி இலங்கை திருச்சபை மகிழ்வுடன் கொண்டாடுகின்றது. இலங்கை நாட்டில் சுமார் 24 ஆண்டுகாலம் பணி செய்து, இலங்கை மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்த தூய, உன்னத மனிதன் தூய ஜோசப்வாஸ். அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றி வரும் ஆசிய மறைப்பரப்பாளர்கள், அவருடைய வாழ்வில் காணப்பட்ட நற்புண்ணியங்களையும், அவருடைய எளிமையான, ஆன்மீக வாழ்வையும் பின்பற்றும்படியாக அழைக்கப்படுகின்றார்கள். இத்தருணத்தில் நாம் ஒன்றை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். அத்தூயவரின் கரங்களால் செய்து பாதுகாக்கப்பட்ட சிலுவை, இலங்கை நாடு முழுவதும் எடுத்துச் சென்று மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. அதன்போது அதனை கொண்டு சென்ற குருவானவர் இச்சிலுவையின் மகிமையினை மக்களுக்கு எடுத்துச் சொன்ன வேளையில் இச்சிலுவை வழியாக மக்கள் பல புதுமைகளை அனுபவித்துள்ளார்கள் என்றும் அதனால் மக்களின் வாழ்வும், சமூகமும் இன்றளவும் பாதுகாக்கப்படுகின்றது என்றும் நான் அறிந்து கொண்டேன். அத்தகைய புனிதமிக்க திருச்சிலுவையை கண்ட, முத்தம் செய்த நாம் ஒவ்வொருவரும் பாக்கியவான்களே.


இத்தகைய மாமனிதரை நான் ஏன் தலைசிறந்த மறைப்பரப்பாளர் என்றேன். அதற்கான காரணங்கள் பல உள்ளன. தூய ஜோசப்வாஸ் இலங்கையில் பணியாற்றிய காலப்பகுதியில் மறைபரப்பாளர்களாக இருந்த யாவருமே ஐரோப்பியர்கள். அவர்கள் ஐரோப்பாவில் இருந்து விசுவாசத்தை இங்கு கொண்டு வந்தார்கள். ஆனால் தூய ஜோசப்வாஸ் அடிகளாரோ ஒரு ஆழமான முன்மாதிரிகையை பெற்றுக்கொடுத்தார். தான் பிறந்து வளர்ந்த ஆசிய நாட்டின் கலாச்சாரத்தில் இருந்து, தான் பணி செய்ய தேர்ந்து கொண்ட "இலங்கை" என்னும் ஆசிய நாட்டின், அதன் தலையங்களுக்கேற்ப நற்செய்தியை எடுத்துச் சொல்லி, துன்புறுத்தப்பட்ட மக்களின் விசுவாசத்தை தட்டி எழுப்பினார். இத்தகைய நிலையை பற்றி சிந்திப்பது என்பது, ஆன்மாக்களுக்கென அவரிடம் இருந்த தாகம் எத்துனை என்பது சிந்திக்கப்பட முடியாதது. அவர் ஒல்லாந்தரின் காலத்தில் இலங்கைக்கு பணி செய்ய வரவேண்டும் என்ற எண்ணம் கொண்ட நாள் முதல், இளங்குருவாக இங்கு வருகைதந்து இழந்துபோன மந்தையை கால்நடையாக தேடிச்சென்று, கடவுளின் அதீத பராமரிப்பின் மூலம் தன் பணியை நிறைவேற்றினார். அதற்கு அவரிடமிருந்து "பலம்" என்ற கருவி மட்டுமே உந்துசக்தியாக இருந்தது.

அடிகளார் பணி செய்ய ஆரம்பித்தபோது "ஜோன்" என்ற தனது வீட்டு வேலையாளை தவிர எந்த உதவியோ அல்லது ஆதாரமே இருக்கவில்லை. மாறாக கூலி போன்ற மாறுவேடத்தில் தனது உடைகளையும், திருப்பலிக்கு தேவையான பொருட்களை மட்டும் சுமந்துகொண்டு, உணவிற்காக கையேந்தி மக்கள் கொடுத்த உணவினை உண்டு தனது நாட்களை கழித்தார். கைகளில் விலங்கிட்டபடி ஒற்றன் என சந்தேகிக்கபட்ட நிலையில் கண்டி இராச்சியத்தில் கால்பதித்தார். இரண்டு ஆண்டு கால சிறைவாசத்தை இன்புடன் கழித்தார். இந்த நிகழ்வுகள் யாவற்றையும் ஒரு சந்தர்ப்பமாக மாற்றிக் கொண்டார். அவருடைய இடைவிடாத செபத்தினாலும், இறைபராமரிப்பினாலும் கண்டி மன்னனின் இதயத்தையும் வெற்றிகொண்டார். இத்தகைய பொறுமைமிக்க மறைப்பணியாளரின் பணிகளை பற்றி எண்ணுவதும், நாம் எவ்வாறான பணிகளை மக்களிடையே மேற்கொள்கின்றோம் என்பதை சிந்திக்கத் தூண்டுகின்றது.

தூய ஜோசப்வாஸின் மறைப்பணியின் தன்மைகள் யாவும் வித்தியாசமானதாகவும், புதியதாகவும் தோன்றுகின்றன. அவருடைய மறைபரப்புப்பணி எவராலும் அச்சிட்டோ அல்லது உறுதி செய்தோ கொடுக்கப்படவில்லை. மாறாக அவருடைய தூய்மைமிக்க வாழ்வினாலும், நெருக்கமான அன்புறவு கொண்ட மக்களின் ஆதரவினாலும், பௌத்த மக்களின் மனதை வென்ற ஒரு அர்ப்பணிப்பான, அமைதியான சேவையினாலும் தொடரப்பட்ட ஒரு மாபெரும் பணி. இன்று யாரேனும் மறைபரப்பு பணிக்காக மேல்நாட்டிற்கோ, அல்லது எம் நாட்டிற்கோ வந்தால் முதலில் கேட்பது மறைபரப்புப்பணி தொடர்பான கடிதம். ஆனால் அதுபோன்ற எதுவுமின்றி இறைபராமரிப்பின் வழியாக தொடர்ந்த பணியின் நிமித்தம் இன்று, வானுயர்ந்து நிற்கும் எம் புனிதரின் பணிகளை நினைக்கையில் "வணங்கியே வாழ்த்தி புகழ்ந்து வந்தனை" செய்கின்றது இலங்கை மக்களின் உள்ளம்.

அவருடைய மறைபரப்பு ஆன்மீகம் இன்றளவும் இலங்கைத் திருச்சபையை, குறிப்பாக இலங்கையின் கிறிஸ்தவத்தை தலைநிமிரச் செய்துள்ளது. பாதணிகளை அணியாத பாதங்கள், மரக்குற்றியை ஏந்திய கைகள், திருப்பலி பொருட்களை தாங்கிய தோள்கள், திருச்செபமாலையை ஏந்திய கரங்கள், கச்சை போன்ற உடையை ஏந்திய உடல் இதுதான் நமது மறைபரப்பாளரான தூய ஜோசப்வாஸ். இன்றைய மறைபரப்பாளர்களை எண்ணுகையில் இவற்றைக் காண்பதே அரிது. எது உண்மையான மறைபரப்பு பணி? கார்களில் சென்று மக்களைத் தேடுவதா? அல்லது கால்நடையாக சென்று தொலைந்த ஆட்டைத் தேடுவதா? இயேசுவை இதயத்தில் தாங்கிய இந்த மாபெரும் புனிதன் இன்று நாம் கத்தோலிக்கர்கள் என்று பெருமையாகச் சொல்ல வழிவகுத்தார். இத்தகைய புனிதரின் விழாவைத்தான் பெருமையாகக் கொண்டாட வேண்டுமே தவிர, ஏனைய அர்த்தமற்ற விழாக்களை அல்ல, தொடர்ந்து செபிப்போம். புனிதரின் துணை எம் நாட்டிற்கு எப்போதும் உண்டு என்பதை நம்புகின்றேன். எல்லோருடைய வாழ்விலும் கிறிஸ்துவை தந்த இப்புனிதனின் பணியை முன்மாதிரிகையாக கொண்டு ஆசியாவிலே நாமும் ஒரு மறைபரப்பாளராவோம்.

# ஆண்டவரின் திருமுழுக்கு



திருமுழுக்கு கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கம், நுழைவாயில், பாவத்தின் கழுவாய், ஜென்மபாவத்தையும், கர்மபாவத்தையும் போக்கும் அருளடையாளம் திருமுழுக்கு நம் பாவங்களை கழுவி, நம்மை கடவுளின் பிள்ளைகளாக்கவும், திருச்சபையின் உறுப்பினர்களாகவும் மாற்றும் திருவருட்சாதனம். திருமுழுக்கின் வழியாக நாம் கடவுளின் அன்பு மக்களாகப் பிறக்கும் புதுப்பிறப்பை நமக்கு அளிக்கின்றார். "நீங்கள் பிள்ளைகளாயிருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி, அப்பா தந்தையே எனக் கூப்பிடுகின்றது. இதனால் நீங்கள் கடவுளின் பிள்ளைகளாகவும், உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கின்றீர்கள்" (கலா 4:6-7)

## இயேசுவின் திருமுழுக்கு

இயேசுவின் திருமுழுக்கு அவரின் முப்பது வருட மறைந்த வாழ்வு நிறைவு பெற்று, பொதுவாழ்வுக்கு, இறையரசு பணிவாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நிகழ்வு. இயேசு தான் இறைபணிக்குத் தயார் என்பதை வெளிப்படுத்தும் அடையாளம். நாசரேத்தில் வாழ்ந்த சாதாரண தச்சுத் தொழில் செய்யும் குடும்பத்தில் வாழ்ந்தவரை இறையரசின் முழுநேரப் பணியாளராக மாற்றிய அனுபவமே திருமுழுக்கு நிகழ்வு. இயேசு திருமுழுக்கு மூலம், தம் பணிவாழ்வுக்கு தயாராகின்றார் என்பதை உறுதிப்படுத்தி, அவர் பணி தந்தையால் அர்ச்சிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, தொடங்குகிறது என்பதை உறுதிப்படுத்தும் நிகழ்வு இயேசுவின் திருமுழுக்கு.

இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வு தான் யார் என்பதை தந்தை உலகிற்கு வெளிப்படுத்திய நிகழ்வு தம் மூன்று வருட போதனையால் வாழ்க்கை முறையால் புதுமைகளால், கல்வாரி பயணத்தால், சிலுவையில் சிந்திய இரத்தத்தால் மனிதகுலத்தை மீட்கும் பணி நெருங்கி ஆதாமின் கீழ்ப்படியாமையால் விளைந்த சாபக்கேட்டை இயேசு தமது கீழ்ப்படிததால் நீக்கினார். அதற்கு என் அன்பு மகன் என நற்சான்று தருகின்றார் தந்தை.

இயேசுவின் திருமுழுக்கு அவர் கல்வாரியில் பெற இருந்த திருமுழுக்கு முன் அடையாளம். லூக் 12:50 "ஆயினும் நான் பெறவேண்டிய திருமுழுக்கு ஒன்று உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றேன்"

இயேசுவின் திருமுழுக்கு தாம் இறைமகனாயிருந்தும் பாவமில்லாதவராக, இருந்தாலும், மனிதர்களாகிய நம்மோடு தம்மை அடையாளப்படுத்தியதை வெளிக்காட்டும் நிகழ்வு, இயேசு பாவங்களிலிருந்து விடுபட வேண்டுமென்றோ யோவானால் திருமுழுக்கு பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் பாவிகளோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டதுதான் திருமுழுக்கு நிகழ்வின் இறைவெளிப்பாடு. ஒவ்வொரு கிறிஸ்தவனும் திருமுழுக்கினால் மட்டுமே கிறிஸ்துவோடு இணைக்கப்படுகின்றார்கள். காரணம் கிறிஸ்து கடவுள் தன்மையால் விளங்கினாலும் பாவிகளோடு பழகினார். மனிதர்களோடு தம்மை நிரூபித்துக்காட்டத்தான். அவரின் திருமுழுக்கு நிகழ்வு நடந்தது.

இயேசுவின் திருமுழுக்கு மற்றுமொரு உண்மையை வெளிப்படுத்துகிறது. தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் எப்படிப்பட்ட வாழ்வு வாழ்வார்கள் என்பதை உறுதி செய்யத்தான். இயேசு திருமுழுக்குப் பெற்றார். அவர்மீது ஆவியார் இறங்கி வந்ததால், கடவுளுக்கு உரியதைச் செய்தார். அறத்தை நிலைநாட்டினார். நோயாளிகளைக் குணப்படுத்தினார். சிறையிலிருந்தவர்களை விடுவித்தார். கட்டுண்டவர்களை மீட்டார். இத்தகைய பணிகளைச் செய்யத்தான் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். தூய ஆவி புறா வடிவில் இயேசு மீது வந்திறங்கினார். புறா புதுப்படைப்புக்கும், புதுப்பிறப்பிற்கும் அடையாளம். புறா, அமைதி, சாந்தி, சமாதானத்தின் அடையாளம், தூய்மை மாசற்ற தன்மையின் உருவம். இயேசு இந்த குணங்களை ஆவியாரிடமிருந்து பெற்றது மட்டுமல்ல தம் பணி வாழ்வில் இக்குணங்களை செயல்படுத்தி வாழ்ந்தார். இயேசு புதிய உலகை படைக்க வந்த ஒரு புதிய பிறவி என்ற உண்மையை உணர்த்தத்தான் இயேசுவின் திருமுழுக்கு நிகழ்ந்தது.

## தமது திருமுழுக்கு

நம் ஒவ்வொருவரின் திருமுழுக்கும் ஒரு இறை அனுபவம். இறைப்பிரசன்னத்தை நம் வாழ்வில் உணரும் நேரம் நாம் வானதூதரின் தோழனாக, இயேசுவின் சகோதர சகோதரியாக மாறும் இறையனுபவம் திருமுழுக்குத் தான். இறைவனில் நமக்கு நிறைவாகப் பெற்றுத் தருவது அருட்கொடைகளைப் பயன்படுத்தி கடவுள் நமக்கென்று வகுத்திருக்கும் திட்டத்தை வெளிப்படுத்துகிறார்.

## விட்டுவிடுகின்றேன் விசுவசிக்கின்றேன்

திருமுழுக்கின் வழியாக கடவுள் நம்முன் குடிகொள்கின்றார். நாம் தூய ஆவியாரின் ஆலயமாக மாறுகின்றோம். இத்திருமுழுக்கின் அருள் நம்மில் நிலைத்திருக்க நாம் இரண்டு பணிகளை நம் வாழ்வில் தொடர்ந்து செய்துக் கொண்டிருக்க வேண்டும். சாத்தானையும், அவனின் தீய செயல்களையும் அவனோடு சேர்த்து வாழும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்


# கந்தானை புனித செபஸ்தியார் திருத்தலத்தின் 151 வருடாந்த திருவிழா 2019

கருப்பொருள் : சிலுவையை முதன்மையாகக் கொண்ட சீடத்துவத்தை நோக்கி...



**தை 06ஆம் திகதி – ஞாயிறுக்கிழமை : காலை 6.30 மணிக்கு திருப்பலி**
பங்கில் இறந்த விசுவாசிகளுக்காகவும், தியாக உள்ளத்தினருக்காகவும் கல்லறை பூமியில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**தை 11ஆம் திகதி – வெள்ளிக்கிழமை : மாலை 4.00 மணிக்கு கொடியேற்றப்படும்.**
**– மாலை 6.15 மணிக்கு புனித செபஸ்தியார் திருத்தலத்தின் கிணறு ஆசீர்வதிக்கப்படும்.**

**தை 11ஆம் திகதி – 18ஆம் திகதி வரை : மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலை, பிரார்த்தனை மற்றும் நவநாள் திருப்பலி**

**தை 15ஆம் திகதி செவ்வாய்கிழமை (தைப்பொங்கல் தினம்) : நோயாளர்களை ஆசீர்வதிக்கும் நாள்**
**: காலை 9.00 மணிக்கு திருப்பலி மற்றும் நோயாளர்களை ஆசீர்வதித்தல்**

**தை 19ஆம் திகதி வியாழக்கிழமை : மாலை 7.00 மணிக்கு மாலை ஆராதனை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.**

**தை 20ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) திருவிழா – திருப்பலி**
**காலை 4.00, 5.00, 6.00 திருப்பலி – சிங்களம்**
**காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி**
**மேதகு ஆயர் மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில்**
**திருவிழா திருப்பலியின் பின்னர் திருச்சுரூப பவனி இடம்பெறும்.**

**காலை : 10.00 திருப்பலி – தமிழ்**
**காலை : 11.00 திருப்பலி – சிங்களம்**
**மாலை : 5.00 திருப்பலி – ஆங்கிலம்**
**மாலை : 6.00 திருப்பலி – சிங்களம்**
**இத்திருப்பலியானது திருத்தலத்தில் உள்ள குருக்களின் தலைமையில் நடைபெறும்.**
**மாலை 7.00 திருப்பலி – சிங்களம்**
**இவ் இறுதித் திருப்பலியானது கந்தானை வட்டாரத்தில் உள்ள குருக்களினால் ஒப்புக்கொடுக்கப்படும்.**

**மு.கு : தை 11ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை தினமும் மாலை 7.00 – 9.00 மணி வரை குருக்களினால் பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.**

**திருத்தலபரிபாலகர்**
**அருட்தந்தையர்கள்**




புதுவருட நல்வாழ்த்துக்கள்

# திருமறையின் வரலாற்றுச் சுருக்கம்

## அ. இஸ்ராயேலரின் வரலாற்றுச் சுருக்கம்

### 1. முதுபெரும் தந்தையர். [ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு, யோசேப்பு]

ஏறத்தாள இயற்கைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன் கல்தேயரின் நாட்டில், ஊர் என்ற இடத்தில் ஆபிரகாம் என்ற நீதிமான் ஒருவர் வாழ்ந்துவந்தார். இவர் முழுந்தைச் செல்வம் இல்லாத செல்வந்தராக இருந்தார். வானகத் தந்தை இவருக்குத் தோன்றி அவரோடு பேசினார். ஊர் என்ற நாட்டைவிட்டுப் புறப்பட்டு தான் கொடுக்கப்போகும் நாட்டுக்குப் போகச் சொன்னார். அந்த நாட்டில் அவரை ஓர் இனத்தின் தந்தையாக ஆக்கி, எண்ணில் அடங்காத நன்மைகளை அவருக்கு வழங்கப்போவதாக வாக்குப்பண்ணினார். வானகத் தந்தையை முழுதாக நம்பிய ஆபிரகாம் தன் வீட்டாரோடும், மந்தைகளோடும் தன் நாட்டைவிட்டுப் புறப்பட்டார். வானகத் தந்தை அவரைக் கானான் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்தார்.

ஆபிரகாமுக்கு ஆகார் என்ற பணிப்பெண் வழியாக இஸ்மாயில் என்ற மகனும், மனைவி சாராள் வழியாக ஈசாக்கு என்ற மகனும் பிறந்தார்கள். இஸ்மாயில் வழியாக இஸ்லாமிய மக்களும், ஈசாக்கு வழியாக இஸ்ராயேல் மக்களும் பலுகிப் பெருகினார்கள். ஈசாக்கு றெபேக்காவைத் திருமணம் செய்து ஏசோ, யாக்கோபு என்ற இது புதல்வர்களைப் பெற்றெடுத்தார். யாக்கோபு 12 மகன்மாரைப் பெற்றெடுத்தார். இவர்களுள் யோசேப்புவை அவர் அதிகம் அன்புசெய்தார். இதனால் இவர் தன் சகோதரர்களால்20 வெள்ளிக்கு விற்கப்பட்டார். இவரை விலைக்கு வாங்கிய வியாபாரிகள் எகிப்துக்குக் கொண்டு சென்றார்கள்.

வானகத் தந்தையின் அருளால் யோசேப்பு, எகிப்து நாட்டில் உணவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்போது கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டது. யாக்கோப்பும் அவருடைய பத்னொரு மக்களும் தங்களின் பிள்ளைகளோடு உணவு தேடி எகிப்துக்கு வந்தார்கள். யோசேப்புவை அடையாளம் கண்டதால் அவர்கள் அங்கேயே தங்கிவிட்டார்கள். காலப்போக்கில் இவர்கள் பலுகிப் பெருகி எகிப்தியரை மிஞ்சும் அளவுக்கு எண்ணிக்கையில் அதிகமானார்கள். இதனால் அச்சமுற்ற பார்வோன் என்ற எகிப்திய மன்னன் இஸ்ராயேலரின் மக்கள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த, அவர்களின் ஆண் குழந்தைகளைக் கொன்று நைல் நதியில் வீசவேண்டும் என்று ஆணையிட்டான்.

தொடரும்

அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)

# திருப்பலி

எலிசபெத் போர்த்துக்கல் நாட்டின் இளவரசி. அரச சபையிலே ஒரு இளைஞன் நல்லொழுக்கமும் மிகச் சிறந்த பக்தியும் நிறைந்தவனாக இருந்தான்.

இவனுடைய இந்த சீரிய குணத்தினால் இளவரசிக்கு இவர்மீது ஒரு தனி அன்பு இருந்தது. இந்த அன்பை சகிக்க முடியாதவனாய், அரண்மனையிலிருந்த இன்னொரு பணியாள் அரசனிடம் இவனைப்பற்றி தப்பான முறையில் குறை சொல்லிக் கொண்டிருந்தான்.

அரசனும் இந்த பணியாளின் சூதான பேச்சை நம்பிவிட்டான். இதனால், இளவரசியின் நட்பை சம்பாதித்திருந்த நல்லொழுக்கமுள்ள பக்தியான இளைஞனைக் கொல்ல ஒரு ஏற்பாடு செய்தான்.

நகருக்கு வெளியே அரசனுக்குச் சொந்தமான ஒரு நெருப்பு சூளை இருந்தது. நெருப்புச் சூளையின் நிர்வாகிக்கு அரசன் ஒரு ஆணை கொடுத்து அனுப்பினான்.

"நாளை அதிகாலையில் யார், அங்குவந்து 'அரசன் சொன்னபடி செய்ய வேண்டுமாம்' என்று சொல்லுகிறார்களோ அவனை மறு பேச்சின்றி நெருப்புச் சூசையில் வீசிவிடு' என்பதுதான் அந்த ஆணை.

மறுநாள் அதிகாலையில் நல்ல இளைஞனை நெருப்புச் சூளைக்கு அரசன் அனுப்பினான். போகும்போது பாதையில் ஒரு ஆலயத்தில் திருப்பலி நடந்துகொண்டிருந்தது.

உடனே இளைஞன் ஆலயத்தினுள் சென்று பக்தியுடன் திருப்பலியில் பங்கெடுத்தான்.

இதற்கிடையில் அரசன் பொறுமையிழந்தவனாய் அடுத்த வாலிபனை செய்தி அறிவதற்காக நெருப்புச் சூளை இருந்த இடத்திற்கு அனுப்பினான்.

ஆனால், இதுவரை முதல் இறைஞன் திருப்பலி முடிந்து அவ்விடம் வந்து சேரவில்லை. இதனால் இந்த வாலிபன் தான், அரசன் குறிப்பிட்டவன் என எண்ணி, அவனை பேசவும் விடாமல் நெருப்புச் சூளையில் தூக்கி வீசிவிட்டான்.

நல்ல இளைஞன், திருப்பலி முடிந்து மெதுவாக அவ்விடம் வந்து, 'அரசன் சொன்னபடி, செய்ய வேண்டுமாம்' எனக் கூறியபோது,

"செய்து விட்டேன்" எனப் பதில் வந்தது. இவன் அரசனிடம் போய் செய்தியை தெரிவித்த போது அரசன் அதிர்ச்சி அடைந்தான்.

பொறாமை கொள்ளாதே!

திருப்பலி நம்மை பல ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுகிறது.

**"நல்லோரின் வழியை கடவுள் பாதுகாப்பார், தீயோரின் வழியோ, அழிவுக்கேச் செல்லும்"**

**(திபா. 1:6)**






# விவிலியப் பகுதி



## மத்தேயு நற்செய்தி அதிகாரம் 1, 2

1) ஆபிரகாம் முதல், கிறிஸ்து வரை எத்தனை தலைமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது?
2) மரியா பெற்றெடுத்த குழந்தைக்கு என்ன பெயர் இட்டார்?
3) இம்மானுவேல் என்ற பெயரின் அர்த்தம் என்ன?
4) இயேசு பிறந்த ஊர் எது?
5) அங்கு ஆட்சி செய்த அரசன் யார்?
6) ஞானிகளுக்கு வழிகாட்டியது எது?
7) ஞானிகள் குழந்தை இயேசுவுக்கு என்ன பரிசுகளை கொடுத்தார்கள்?
8) ஆண்டவருடைய தூதரிகளின் வேண்டுகோளுக்கிணங்க மரியும் யோசேப்பும் குழந்தையை தூக்கிக் கொண்டு எங்கு சென்றார்கள்?
9) ஏரோது சினம் கொண்டு செய்தது என்ன?
10) யோசேப்பும், மரியும் குழந்தையும் எங்கே வாழ்ந்தனர்?

15

**வர்ணம் தீட்டுக . [இயேசுவின் திருமுழுக்கு]**



# இயேசுநாதர் பொன்மொழிகள்!



- இருதயத்தில் தூய்மை உடையவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் ஆண்டவனைக் காண்பார்கள்.
- குழந்தைகளின் மழலை மொழியிலிருந்து விவேகம் ஏற்படுகிறது.
- நம்மில் ஒவ்வொருவரும் பிறருடன் பொய் பேசுவதைத் தவிர்த்துவிட்டு உண்மையே பேசுதல் வேண்டும்.
- மனிதன் வெறும் உணவின் உதவியால் மட்டும் உயிர் வாழவில்லை. தேவனின் திருவாயிலிருந்து வெளியாகும் அருள் மொழிகளாலும் உயிர் வாழ்கிறான்.
- நல்ல மரங்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரங்கள் கெட்ட கனிகளைக் கொடுக்கும்.
- நீதியின் மேல் நம்பிக்கை கொண்டவர்கள், நேர்மையை நேசிக்கறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் எப்பொழுதும் திருப்தியுடன் இருப்பார்கள்.
- தட்டிப் பறிப்பவர்கள் வாழ்ந்ததில்லை.... விட்டுக் கொடுப்பவர்கள் வீழ்ந்ததில்லை.
- கடவுளுக்காகக் காத்திருப்போர் வெட்கப்படுவதில்லை.
- உங்கள் எதிரிகளை மன்னியுங்கள்... உங்கள் பாவங்களை இறைவன் மன்னிப்பார்.

**சிறுவர்களே! இம்மாதம் 27ம் ஞாயிறு திருப்பாலத்துவ தினம். எனவே நீங்கள் திருப்பாலத்துவ தினத்தைப்பற்றிய உங்களது ஆக்கங்கள், வரைதல், கவிதைகள், போன்றவற்றை இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஞானஒளி,**
**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் :**
**cgnanaoli@yahoo.com**




# உன்னோடு ஒரு நிமிடம்



புதுவருட நல்வாழ்த்துக்கள்

நண்பா!

வறண்டு போனதாய்
ஒரு சமுத்திரத்தின்
சரித்திரத்தை எங்கேனும்
படித்திருக்கின்றாயா?

விண்மீன்கள் இத்தனைதான்
இருக்கின்றன என்று
விஞ்ஞானம் அறுதியிட்டுக்
கூறிவிடுமென்ற
மெய்ஞானம் உனக்குள் எழுந்ததுண்டா?

மயிலின் தோகையில்
அடுக்கி வைக்கப்பட்ட
இறகுகளில்
அழகின் ஆனந்தத்தை அடைந்ததுண்டா?

நாலைந்து பருவத்தில்
நாய்குடை காளான் பறித்து
மழையில் நனையாமல் இருக்க
தலையில் பிடித்ததுண்டா?
உள் வட்டம் பார்த்ததுண்டா?

நண்டு வலைக்கும்
நாகப்பாம்பு புற்றுக்கும்
வேறுபாடு அறியாமல்
விரல்களை விட்டதுண்டா?
வியர்த்துப் போனதுண்டா?

ஆணி வேருக்கும்
சல்லி வேருக்கும்
வேறுபாடு என்ன வென்று
டீச்சர் விளக்கிக் காட்டுகையில்
ஆலம் விழுது ஒன்று
வேறாக மாறுவது
எந்த வகையில் வரும்
என்று கேட்டுச் சிரித்ததுண்டா?

பால் வீதி என்று சொல்லும்
பிரபஞ்ச ரகசியத்தில்
யாதுண்டு என்று சொல்ல
விஞ்ஞானம் ஒன்று உண்டா?

நண்பா!

உலகத்தை ஒரு நிமிடம்
உற்றுப் பார்
உன்னையும் ஒரு நிமிடம்
உற்றுப் பார்

உன்னில் நீர் இருக்கும்
உன்னிலே நிலமிருக்கும்
கொஞ்சம் நெருப்பிருக்கும்
பரந்துபட்ட ஆகாயமிருக்கும்
நெஞ்சமெல்லாம் காற்றிருக்கும்

ஐம்பூதங்கள்
பிரபஞ்சத்தில் மட்டுமன்று
உன்னிலும் பிரவாகம் எடுக்கும்

காரணம் கடவுள் அங்கிருந்துதான்
உன்னைக் கடைந்தெடுத்தார்.

அவரின் கடைசிப் படைப்பு நீ தான்
அவரின் கனவுப் படைப்பும் நீ தான்
மீதமான எல்லாப் படைப்புகளும்
அவற்றின் மறு உற்பத்தி தான்!
உன் மீது வீசப்படும் கல்லில்
நீ கண்ணாடியாகிறாய்
அவர் தான் நொறுக்கப்படுகிறார்

உனக்குப் பின்பாக
பறிக்கப்படும் குழிகளில்
...ம்பமாய்த்தான் ஆகிறாய்
...வர்தான் பிணமாகிறார்.

உனக்கு எதிரான
வார்த்தைகளில்
நீ வெறுமனே விதைக்கத்தான் படுகிறாய்
அவர் தான் புதைக்கவும் படுகிறார்.

உன் நெருக்கடிகளில்
நீ குழம்பிப் போய்க கதறுகிறாய்
அவர்தான் கசக்கி எறியப்படுகிறார்.

உன் கவலையான தருணங்களில்
நெருக்கடியான தவிப்புகளில்
பிரச்சினைகளின் மத்தியில்
கைவிடப்பட்ட சூழலில்
கடவுள் உன்னிடம் பேசினால்
எப்படியிருக்கும் என சிந்தித்தேன்

கலங்காதே நண்பா! ஏனெனில்
கடவுள் உன்னோடு பேசுகின்றார்...
நீ தொடர்ந்து
காது கொடுத்துக் கேள்.

தொடரும்

# எது அவசியமானது?



நான் மட்டும் இன்னும் கொஞ்சம் அழகா பிறந்திருக்கக்கூடாதா? நான் இன்னும் உயரமா பிறந்திருக்கக்கூடாதா? நான் அவனை அல்லது அவளைப் போல திறமையாக இருக்க முடியலையே? அவர்களைப்போல் என்னிடம் பணம் இல்லையே? என்றும் நம்மைச் சுற்றி இருக்கும் பலர் இன்னும் கொஞ்சம் மாறினால் நல்லா இருக்குமே. என் சொந்தக்காரர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? நான் பணிபுரிகிற இடத்தில் என்னோடு இருப்பவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? என்று நம்முடைய எதிர்பார்ப்புக்கள் நீண்டுகொண்டே செல்லும். பெற்றோர்கள், கொஞ்சம் புத்திசாலியாக, அறிவாளியாக இருந்திருந்தால்... நாங்கள் எங்கேயோ (?) போயிருப்பேன் என்று பல நேரங்களில் அங்கலாய்த்திருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட எண்ணங்கள் கண்டிப்பாக மாற்றங்களையோ, உயர்வையோ ஒருபோதும் தரப்போவதில்லை. மாறாக இவையெல்லாம் நாம் தப்பித்துக் கொள்ள பயன்படுத்தும் ஒரு ஆயுதம்.

ஒன்று மட்டும் சொல்கின்றேன். “எதுவும் என்னை தோற்கடிக்கக்கூடாது என்கிற மனநிலை வந்தவிட்டால், வாழ்க்கையில் பாதகமான குறைகளும் சூழ்நிலைகளும் சாதகமான நிறைவான சூழ்நிலையாக மாறிவிடும்” வாழ்க்கையில் நமக்கு அமைந்த குறைகள் இரண்டு வகை. ஒன்று மாற்றக்கூடியது. மற்றொன்று மாற்றவே முடியாதது. மாற்றவே முடியாத குறைகளை ஒருபோதும் குறைகளாகவே கருதாதீர்கள். மாறாக மகத்தான மூலதனங்கள் என்று புரிந்துகொண்டு முன்னேறுங்கள். உங்கள் வெற்றி உறுதி.

உடல் சம்பந்தமாக தாழ்வு மனப்பான்மை ஒருபோதும் நமக்கு இருக்கக் கூடாது. உடலில் உள்ள குறையை சரிசெய்ய முடியுமானால் சரிசெய்து கொள்ளுங்கள் தவறில்லை. முடியாதவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள். அது உங்களை வாழ்வின் உச்சிக்கு அழைத்துச் செல்லும். கால் போய்விட்டால் மலையேற முடியுமா? நாட்டியம் ஆட முடியுமா? இயற்கை காலுக்குப் பதிலாக செயற்கைக் கால் வைத்தாலும் நடக்கவே முடியாது என்று நம்பிக்கொண்டிருந்த உலகில் மலையேறவும் முடியும், நாட்டியமும் ஆடமுடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள். உடல் ஊனமுற்ற பலரும் பல துறைகளில் சாதித்திருக்கிறார்கள். எனவே முதலில் நம்மை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பிறர்மீது நிறைய எதிர்பார்ப்புக்களை வைத்துக் கொண்டு அதன்மீது நம் வெற்றி மாளிகையை கட்டுவது நமது அறியாமையை காட்டுகிறது. நாம் எதிர்பார்ப்பதை போல பிறரும் நம்மிடம் எதிர்பார்ப்பார்களே. பிறரிடம் நீங்கள் எதிர்பார்ப்பதற்கு எந்த அளவிற்கு உரிமை இருக்கிறதோ, அதைவிட அதிகமாகவே அவர்கள் அவர்களின் விருப்பப்படி வாழ்தற்கு உரிமை உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். குடும்பம் தாண்டி இந்த சமூகத்தின் மீதும் நம்முடைய எதிர்பார்ப்பு அதிகமாகவே இருக்கிறது. அன்றாடம் நாம் சந்திக்கிற துப்பரவு பணியாளர், ஆட்டோ ஓட்டுநர், பேரூந்து வழிநடத்துனர், அலுவல நண்பர்கள் தொடங்கி அரச ஊழியர்கள், முதலமைச்சர், பிரதம மந்திரி, ஜனாதிபதி வரை எல்லோரிடமும் நாம் குறையைக் கண்டு மனவேதனை அடைகிறோம். எல்லோரும் மதர் தெரசா, புத்தராக மாறிவிட்டால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் இந்த மாற்றத்தை நனவாக்க ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் உழைக்க வேண்டும். ஆனால் அது நடைமுறைக்கு சாத்தியமில்லை. ஏனெனில் ஒவ்வொருவரும் பிறந்து வளர்ந்த சூழல் வேறு. ஒவ்வொருவரின் அனுபவங்களும் வேறு, நாம் நினைப்பதுபோல் எல்லோரையும் மாற்றியமைப்பது சாத்தியம் இல்லை. ஏன் உங்கள் இல்லத்தில் உள்ள உங்கள் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், பாட்டி, தாத்தா ஒத்த கருத்து ஏற்படுவது எவ்வளவு சிரமம் என்பதை நான் சொல்லத்தேவையில்லை.

ஒரு மனிதன் போல் இன்னொரு மனிதன் இருப்பதில்லை. ஒரு விசயத்தைக் கற்றுக்கொள்வது, எதிர்த்து நிற்பது இவற்றில் உலகம் ஒரே மாதிரியாக நடந்து செல்வதில்லை. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் ஒரே ஒருவரைத் தவிர வேறு எவரையும் நீங்கள் மாற்றிவிட முடியாது. அந்த ஒருவர் நீங்கள்தான்.

மாற்றம் என்பது மானிட தத்துவம் மாறாதிருக்க நான் வனவிலங்கல்லன் என்று கவியரசு கண்ணதாசன் சொன்னதைப் போல் மாற்றம் என்பது இன்றியமையாதது. அந்த மாற்றத்தை உங்களிடமிருந்து தொடங்குங்கள். அப்போதுதான் உங்களை நீங்கள் தினமும் புதுப்பித்துக் கொள்ளமுடியும். வாழ்க்கையை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள, விறுவிறுப்பாக்கிக் கொள்ள சின்ன, சின்ன மாறுதல்கள் அவசியம். நிறைய நேரம் தொலைக்காட்சி பார்ப்பவரா? நேரத்தைக் குறைத்து வேறு நல்ல காரியங்களில் குறிப்பாக புத்தகம் வாசிப்பது, படம் வரைவது, கவிதை எழுதுவது என்று அவற்றிற்கு நேரத்தை ஒதுக்குங்கள். அதிகநேரம் அலைபேசியை பயன்படுத்துபவரா? வாட்ஸ் ஆப், பேஸ்புக் போன்றவற்றில் அதிகநேரம் செலவழிப்பவரா? மேற்கூறிய நல்ல காரியங்களில் அல்லது புதிகாக ஒன்று கற்றுக்கொள்வதற்கு அந்த நேரத்தை செலவழியுங்கள். உங்கள் வாழ்க்கையில் பல நல்ல மாற்றங்கள் உண்டாகும். மாற்றங்கள் நிகழும்போது அவற்றிற்கேற்ப நம்மை மாற்றிக்கொள்வது சிறந்தது. அதைவிடச் சிறந்தது நாமே மாற்றங்களை உருவாக்குவது. மேலே நான் குறிப்பிட்டதைப் போல நீங்களாகவே சில மாற்றங்களை உருவாக்குங்கள். அவ்வாறு உருவாக்கும்போது வாழ்க்கையில் நாம் எதிர்பாராமல் சந்திகின்ற மாற்றங்களை எதிர்கொள்ள நமக்கு உறுதுணையாக இருக்கும்.

துறவற வாழ்வில் மிக எளிமையாக வாழ்ந்து மறைந்தவர் புனித அன்னை தெரேசா.

தன்னை மாற்றிமைப்பதுதான் மிக முக்கியமான, அவசரமான வேலை என்று நீங்கள் தீர்மானித்துவிட்டால், அது நடந்துவிடும். உங்களுக்கு எது அவசியமானது என்பதை சிறிதுநேரம் ஒதுக்கி சிந்தியுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாக, நல்ல உறவோடு, நீங்கள் விரும்புகின்ற வாழ்க்கையை வாழ எது தேவை? எது தேவையற்றது? என்பதை பட்டியலிடுங்கள். தேவையானதை உங்கள் ஒவ்வொரு நாள் வாழ்க்கையிலும் வாழுங்கள். தேவையற்றதை உங்களிடமிருந்து எடுத்து விடுங்கள் அல்லது அதை மாற்றி வாழ முயலுங்கள்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿



# விவிலியம் அறிவோம்

## விவிலியமா? திருநூலா?

விவிலியம் என்ற சொல், ஒத்த ஒலியோசை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட சொல்லாகும். 'The Bible" (கிரேக்க - தோ பிபிலியோன், தா பிபிலியா) என்ற ஆங்கிலப் சொல்லை “விவிலியம்” என்று ஒலிபெயர்துள்ளனர். இதனை திருவிவிலியம் என்று அழைக்கின்றோம். விவிலியத்தை “திருநூல்” என்ற தமிழ் சொல்லாலும் அழைக்கின்றோம். பொதுவாக எல்லா மதங்களின் புனித நூல்களும், “திருநூல்கள்” என்றே அழைக்கப்படுகின்றன. இதனை ஆங்கிலத்தில் 'The Seriptuures. the Sacread the Sacreed the Holy Bible, the Bible எனவும் அழைக்கின்றோம். விவிலியத்தின், “பழைய ஏற்பாடு” “புதிய ஏற்பாடு” என இரு பகுதிகள் காணப்படுகின்றன.




# திருத்தந்தையின் 'ஊர்பி எத் ஓர்பி' கிறிஸ்மஸ் செய்தி




**கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்**

அன்பு சகோதரர், சகோதரிகளே, கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்.

உரோம் நகரின் விசுவாசிகள், திருப்பயணிகள், இந்த வாழ்த்துரை வழியே நம்மோடு தொடர்பிலிருக்கும் அனைவருக்கும், பெத்லகேமில் ஒலித்த மகிழ்ச்சி நிறை அறிவிப்பை புதுப்பிக்கிறேன்: "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" (லூக்கா 2:14). மாட்டுத்தொழுவம் நோக்கி இடையர்கள் விரைந்து சென்றதுபோல், நாமும், "குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்" (டும 2:12) என்ற உன்னத அடையாளத்தின் முன்னர் சிறிது நேரம் நிற்போம்.

நமக்காக கன்னி மரியாவிடம் பிறப்பெடுத்த இந்தக் குழந்தை நமக்குச் சொல்ல வருவதென்ன? கிறிஸ்து பிறப்பு உலகிற்கு வழங்கும் செய்தி என்ன? இறைவன் ஒரு நல்ல தந்தை, நாமனைவரும் சகோதரர் சகோதரிகள் என்பதே, கடவுள் வழங்கும் செய்தி. இந்த உண்மையே, மனித குலம் குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டத்தின் அடிப்படை. இயேசு கிறிஸ்து நம் மீது பொழிந்துள்ள உடன்பிறந்த உணர்வு இல்லையெனில், நீதியான ஓர் உலகை நோக்கிய நம் முயற்சிகள் எல்லாம், தோல்வியாகவும், நம் உயரிய திட்டங்கள் கூட ஆன்மா அற்றதாகவும், வெறுமையானதாகவும் இருக்கும். இதன் காரணமாக, என் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள், உடன்பிறந்த உணர்வுடன் கூடிய வாழ்த்துக்களாக உள்ளன. ஒவ்வொரு நாட்டின், கலாச்சாரத்தின், தனி மனிதர்களிடையே உடன்பிறந்த உணர்வு நிலவ வாழ்த்துக்கள்.

மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், ஒருவர் மற்றவரை மதித்து செவிமடுக்கும் உடன்பிறந்த உணர்வு கொண்ட நிலைகளுக்கு வாழ்த்துக்கள். பல்வேறு மதங்களின் அங்கத்தினர்களிடையே உடன்பிறந்த உணர்வு நிலவட்டும்.

## மனித முகத்தில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் முகம்

இறைவனைத் தேடும் ஒவ்வொருவருக்கும் இறைமுகத்தை வெளிப்படுத்தவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இறைவனின் முகம் ஒரு மனித முகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது, ஒரு வானத்துதரின் முகத்தில் அல்ல, மாறாக, ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் பிறந்த ஒரு மனித முகத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இறைவன் மனுவுரு எடுத்ததால், அன்பு, ஏற்புடைமை, மற்றும், இந்த ஏழை மனித குலத்தின் மீது அவர் கொண்டுள்ள மதிப்பு ஆகியவற்றின் வழியாக, மீட்பு வருகிறது என்பதை எடுத்துரைக்கிறார். இந்த அன்பு, ஏற்புடைமை, மற்றும், இந்த ஏழை மனித குலத்தின் மீது கொண்டுள்ள மதிப்பு ஆகியவற்றை நாம், வெவ்வேறு இனங்களாக, மொழிகளாக, கலாச்சாரங்களாக பகிர்ந்துகொள்கிறோம். இருப்பினும் நாமனைவரும் மனிதகுலத்தில் சகோதரர், சகோதரிகளே.

நம்மிடையே காணப்படும் வேறுபாடுகள், நம்மைப் பிரிப்பதோ நமக்கு ஆபத்தை வருவிப்பதோ அல்ல. அவை, வளத்தின் ஆதாரமே. ஒரு "மொசைக்" ஓவியத்தை உருவாக்கும்போது, ஒரு சில நிறங்கள் அல்ல, மாறாக, பல்வேறு நிறங்கள் கொண்ட சிறு கற்களை, அந்த ஓவியம் கொண்டிருப்பது அவசியம்.

சகோதரர், சகோதரிகளாகிய நாம் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் என்பதை நம் குடும்ப அனுபவம் சொல்லித் தருகிறது. நாம், நம்மிடையே, சில வேளைகளில், புரிதல் இல்லாதவர்களாக இருந்தாலும், முறிக்கமுடியாத ஓர் இணைப்புச் சங்கிலி நம்மைப் பின்னிப் பிணைத்துள்ளது, மற்றும், நம் பெற்றோரின் அன்பு, நாம் ஒருவரையொருவர் அன்புகூர உதவுகிறது. இதுவே, பரந்துவிரிந்த மனித குல குடும்பத்திலும் உண்மையாகிறது. இங்கு, கடவுளே, நம் பெற்றோராகவும், நம் உடன்பிறந்த உணர்வின் அடித்தளமாகவும், பலமாகவும் உள்ளார். தனி மனிதர்களாகிய நம்மை ஒன்றிணைத்துக் கொண்டுவர உதவும் உடன்பிறந்த உணர்வு சங்கிலியை நாம் மீண்டும் கண்டுகொள்ள, இந்த கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு உதவட்டும்.

## புனித பூமியில் அமைதி நிலவ...

தன் அன்பின் முகத்தை வெளிப்படுத்த இறைவன் தேர்ந்துகொண்ட மண்ணில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக்



கொணரும் நோக்கத்தில், பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடக்கி, அமைதியின் பாதையில் நடைபோட, இஸ்ராயேலர்களுக்கும், பாலஸ்தீனியர்களுக்கும், இந்த கிறிஸ்மஸ் தூண்டுதலாக இருக்கட்டும்.

## சிரியா, மற்றும் ஏமன் நாட்டு மக்களுக்காக...

தாக்குதலின் கீழ் உள்ள அன்பு நிறைந்த சிரியா நாட்டில், பல ஆண்டுகளாக நடைபெறும் போருக்குப்பின் தற்போது, உடன்பிறந்த உணர்வை, அந்நாட்டவர், மீண்டும் கண்டுகொள்ள, குழந்தை இயேசு அனுமதிப்பாராக. சிரியா நாட்டு மக்கள், குறிப்பாக, தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறி, வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்திருக்கும் மக்கள், சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று, அமைதியில் வாழ உதவும் வகையில், அனைத்துலக சமுதாயம், பிரிவு எண்ணங்களையும், சுய நலத்தையும் ஒதுக்கி வைத்து, உறுதியான ஓர் அரசியல் தீர்வு காண உழைக்கட்டும்.

என் எண்ணங்கள் தற்போது ஏமன் நாட்டை நோக்கித் திரும்புகின்றன. அனைத்துலக சமுதாயத்தின் உதவியுடன் அங்கு கொணரப்பட்டுள்ள போர் நிறுத்தம், அந்நாட்டில் போராலும், பஞ்சத்தாலும் துன்புறும் குழந்தைகள், மற்றும், மக்களுக்கு, துயர்துடைப்பைக் கொணர்வதாக.

## ஆப்ரிக்க கண்டத்தின் அமைதிக்காக...

உணவு பாதுகாப்பு, மற்றும், மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்தோர், மற்றும், குடிபெயர்ந்தோர், வாழும் ஆப்ரிக்கா கண்டத்தைக் குறித்தும் எண்ணிப் பார்க்கின்றேன்.

ஆப்ரிக்காவின் அரசியல் மற்றும் சமூக வாழ்வில் ஒப்புரவின் பாதையை ஊக்குவிக்க உழைக்கும் அனைத்து மனிதர்களின் முயற்சியை ஆசீர்வதித்து, அக்கண்டம் முழுவதும் உடன்பிறந்த உணர்வின் புது விடியல் மலரும் நோக்கத்தில், அமைதியின் அரசராம் இத்திருக்குழந்தை ஆயுத மோதல்களை அமைதிப்படுத்துவாராக.

## கொரிய தீபகற்பம், மற்றும் வெனிசுவேலா

கொரிய தீபகற்பத்தின் உடன்பிறந்த உணர்வுப் பிணைப்புகளை ஊக்கமூட்டி, அண்மையில் எடுக்கப்பட்டுள்ள ஒன்றிணைப்பின் பாதையும், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தீர்வுகளும், அனைவரின் நலவாழ்வையும், முன்னேற்றத்தையும், மனதில் கொண்டதாக செயல்பட, இந்த கிறிஸ்மஸ் உதவுவதாக.

வெனிசுவேலா நாட்டில், மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவவும், நாட்டின் வளர்ச்சிக்கு பங்காற்றவும், தேவையான இணக்க வாழ்வைக் கண்டுகொண்டு, உடன்பிறந்த உணர்வுடன் அந்நாட்டு மக்கள் அனைவரும் உழைத்திட, இந்த ஆசீர்வதிக்கப்பட்ட காலம் அனுமதிப்பதாக.

## உக்ரைன் மற்றும் நிக்கராகுவா மக்களுக்காக...

தாமதமாக வந்து கொண்டிருக்கும் நீடித்த அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் உக்ரைன் நாட்டிற்கு, புதிதாக பிறந்துள்ள நமதாண்டவர், துயர் துடைப்பைக் கொணர்வாராக. துன்பங்களிலிருந்து மீண்டுவரவும், மாண்புடன் கூடிய வாழ்க்கை நிலைகளை தன் குடிமக்களுக்கு வழங்கவும் ஆவல் கொண்டுள்ள நாடுகள், அனைவரின் உரிமைகளையும் மதிக்கும் அமைதியை தங்கள் அடிப்படையாகக் கொண்டிருக்கட்டும். உக்ரைனின் கிறிஸ்தவ சமூகத்தோடு நான் மிக நெருக்கமாக உள்ளேன். சமுதாயத்தில் அவர்கள், உடன்பிறப்பு உணர்வையும், நட்புணர்வையும் வளர்த்திட ஆவல் கொள்கின்றேன்.

குழந்தை இயேசுவின் முன், நிக்கராகுவா மக்கள் அனைவரும் தங்களை உடன்பிறந்தோராய் கண்டுகொள்ளட்டும். பிரிவினைகளையும் முரண்பாடுகளையும் களைந்து, ஒப்புரவை ஊக்குவித்து, நாட்டின் வருங்காலத்தை, அவர்கள், ஒன்றிணைந்து கட்டியெழுப்பட்டும்.

## சிறுபான்மையினராக துன்புறும் கிறிஸ்தவர்கள்

கருத்தியல் கொள்கைகள், கலாச்சார மற்றும் பொருளியல் அடிமை முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, தங்கள் சுதந்திரமும் தனித்துவமும் பறிபோகும் நிலைகளால் துன்புறும் மக்களைக் குறித்தும், பசியாலும், கல்வின்மையாலும், மருத்துவ வசதிகள் இன்மையாலும் துன்புறும் மக்களைக் குறித்தும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கிறிஸ்து பிறப்பு விழாவைச் சிறப்பிப்பதில் சிரமங்களைச் சந்திக்கும், குறிப்பாக, சிறுபான்மையினராக சில நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் நோக்கி, தனிப்பட்ட முறையில், என் எண்ணங்கள், செல்கின்றன. இவர்களும், மத சிறுபான்மையினரும், அமைதியில் வாழவும், தங்கள் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதை, குறிப்பாக, இவர்களின் மத உரிமைகள் மதிக்கப்படுவதை காணவும், இறைவன் உதவுவாராக.

இந்தப் புல்லணையில், இரவின் குளிரில் படுத்திருக்கும் இந்தச் சிறு குழந்தை, உலகின் அனைத்துக் குழந்தைகளையும், கைவிடப்பட்ட மனிதர்களையும் கண்ணோக்குவாராக. மீட்பரின் பிறப்பில், அமைதியையும், ஆறுதலையும், நாம் கண்டுகொள்வோமாக. நாம் அனைவரும் நம் ஒரே வானகத் தந்தையால் அன்புகூரப்படுகிறோம் என்பதை உணர்ந்து, நாம் அனைவரும் சகோதரர், சகோதரிகள் என்பதை கண்டுகொண்டு, அதே உணர்வுடன் வாழ்வோமாக.

இவ்வாறு, தன் "ஊர்பி எத் ஓர்பி" எனும் ஊருக்கும் உலகுக்குமான கிறிஸ்மஸ் சிறப்புச் செய்தியை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைவருக்கும் தன் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் வழங்கினார்.

**இறுதியில் அனைவருக்கும் "ஊர்பி எத் ஓர்பி" சிறப்பு ஆசீரையும் அளித்தார்.**




"சமுதாயத்தால் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இறைவனின் மென்மையையும், கருணையையும் எடுத்துச் செல்லுங்கள்"

"இன்றைய மற்றும் நாளையக் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் இவ்வுலகை மனிதம் மிக்கதாக மாற்றுவதற்கு நம்மையே அர்ப்பணிப்போமாக"

"இயேசுவைக் காணும்போது, அன்பே உருவான கடவுளின் முகத்தை நாம் காண்கிறோம், அவரை, நம் சகோதரர், சகோதரிகளின் முகங்களில் கண்டுகொள்வதற்குக் கற்றுக்கொள்கிறோம்"

**பிறந்திருக்கின்ற புத்தாண்டில், இறைவனின் அருள்துணை உங்களோடு இருப்பதாக!**






# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 6:9)

பகுதி – 10

## இறைமொழியால் வேண்டுவோம்

நாம் இறைவேண்டல் செய்ய பல வழிகள் இருக்கின்றன. இறைமொழியாம் விவிலியத்தைக் கொண்டு செபிப்பது எளிய, ஆனால், வலிமையான ஒரு செபமுறை.

### இறைவார்த்தையின் சிறப்புகள்

இறைவன் ஒரு வார்த்தையாலே இந்த உலகை உருவாக்கினார். ஒரு வார்த்தையாலே பல வியத்தகு செயல்களைச் செய்தார் என்று விவிலியத்தின் பல பக்கங்களில் பார்க்கிறோம். இறைவார்த்தையின் வல்லமையைப் பற்றிப் பேசும்போது, தம் வார்த்தையை அவர் அனுப்பி அவர்களைக் குணப்படுத்தினார்.

அழிவினின்று அவர்களை விடுவித்தார் என்றும், அவர் ஒரு வார்த்தை சொல்ல, புயல் காற்று எழுந்தது. அது கடலின் அலைகளைக் கொந்தளிக்கச் செய்தது (தி.ப 107:24-25) என்றும் திருப்பாடல்கள் நூலில் வாசிக்கின்றோம்.

எசாயா இறைவாக்கு, “புல் உலர்ந்து போகும். பூ வதங்கி விழும். நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்” (எசா 40:8) என்கிறது. அதே எசாயா இறைவாக்கினர் இறைவனின் நீதியைப் பற்றிப் பேசும்போது, நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார். நடுநிலையோடு நாட்டின் எளியோரது வழக்கை விசாரிப்பார். வார்த்தை எனும் கோலினால் கொடியவரை அடிப்பார் (எசா 11:4) என்கிறார். இறைவாக்கினர் எசேக்கியேலும் இறைவார்த்தையின் ஆற்றலைப் பற்றி இவ்வாறு மொழிந்தார். தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே, என் வார்த்தைகளுள் எதுவும் இனிமேல் காலம் தாழ்த்தாது. நான் உரைக்கும் வாக்கும் நிறைவேறியே தீரும் (எசே 12:28)

### இயேசுவின் வார்த்தைகள்

புதிய ஏற்பாட்டில் இயேசுவும் தமது வார்த்தைகளின் ஆற்றலைத் தாமே அறிவித்தார். “விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும். ஆனால், என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா” (மத் 24:35) என்பது அதற்கான ஒரு சான்று.

தமது வார்த்தைகள் தூய்மையை, அழியாமையை, தந்தையின் ஆசிகளைப் பெற்றுத் தருவதாகத் தம் சீடருக்கு வாக்களித்தார். என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாக மாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் (யோவா 8:51). நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கனவே தூய்மையாய் இருக்கிறீர்கள் (யோவா 15:3). வாழ்வு தருவது தூய ஆவியே. ஊனியல்பு ஒன்றுக்கும் உதாவது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன (யோவா 6:63) நீங்கள் என்னுள்ளும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும் (யோவா 15:7)

இயேசுவின் வார்த்தைகளின் வலிமையைப் பலரும் உணர்ந்தனர் என்பதையும் நான் காண்கிறோம். சீமோன் பேதுரு இயேசுவிடம், “ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன” (யோவா 6:68) என்று அறிக்கையிட்டார். யூதரல்லாதவரான நூற்றுவர் தலைவர்கூட இயேசுவிடம், “ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால், ஒரு வார்த்தை மட்டும் சொல்லும். என் பையன் நலமடைவான்” (மத் 8:8) என்று தம் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும், மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது (எபி 4:12) என்கிறது எபிரேயர் திருமடல்.

உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்க வல்லது (யாக் 1:21) என்றும், இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள் (யாக் 1:22) என்றும் அறிவுறுத்தினார் யாக்கோபு.

### புனிதர்களின் வாழ்வில்

இறைவார்த்தையால் தொடப்பட்டு, அதன்படி வாழ்ந்தவர்களையே நாம் புனிதர்கள் என அழைக்கின்றோம். ஒரு சிலர் சில இறைவார்த்தைகளால் நேரடியாகத் தூண்டப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக, புனித அகுஸ்தினார். இரவு முடியப்போகிறது. பகல் நெருங்கி உள்ளது. ஆகவே, இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்துகொள்வோமாக (உரோ 13:12) என்னும் இறைவார்த்தையால் மனமாற்றம் அடைந்தார்.

அவ்வாறே, புனித வனத்து அந்தோனியார் (மாற் 10:21) புனித சவேரியார் (மத் 16:26), அருளாளர் அன்னை தெரசா (மத் 25:40), புனித மாக்ஸ்மில்லியன் கோல்பே (யோவா 15:13) புனித பிரான்சிஸ் அசிசியார் (மத் 5:1-8) ஆகியோருடைய வாழ்வை இறைவார்த்தைகள் மாற்றின. நம்மையும் மாற்ற இறைவார்த்தை காத்துக்கொண்டிருக்கிறது.

### விவிலிய இறைவேண்டல் பரிந்துரைகள்

1. இறைமொழியைக் கையில் ஏந்துவோம், வழிபாட்டிற்கு எடுத்துச் செல்வோம்.
2. நாள்தோறும் விவிலியம் வாசிப்போம், சிந்திப்போம். அதன்படி வாழ்வோம்.
3. விவிலிய வார்த்தைகளை மனப்பாடம் செய்து, நம் செப வேளைகளில் பயன்படுத்துவோம்.
4. விவிலியத்திலுள்ள இறைவாக்குறுதிகளை எடுத்துரைத்து, நம் நம்பிக்கையை ஆழப்படுத்துவோம். (எ.கா நான் நீ செல்லும் இடமெல்லாம் உன்னோடு இருப்பேன் யோசு 1:9)
5. விவிலியத்திலுள்ள ஆறுதல் மொழிகளை வாசித்து, மனத்துயர் வேளைகளில் ஆறுதல் பெறுவோம். (எ.கா தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் எசா 66:13)
6. விவிலியத்திள்ள அறைகூவல்களை வாசித்து, நம் வாழ்வை மேம்படுத்துவோம் (எ.கா நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது மத் 6:24)7. விவிலிய மதிப்பீடுகளின்படி வாழ்வோம்.
7. விவிலிய மதிப்பீடுகளின் படி வாழ்வோம்.

தொடரும்

## கோபத்தை தவிர்க்க மனதில் உறுதி

ஒருவர் முன்கோபக்காரர். சிறிய சிறிய காரியங்களுக்கெல்லாம் கோபப்பட்டார். இதனால் பொறுமையிழந்த அவரது நண்பர்கள் ஒவ்வொருவராய் அவரைப் பிரிந்து சென்றனர். மற்றவரும், இவரைப் பார்த்ததும் விலகிச் சென்றனர். இந்த நிலையில் தனிமை அவரை வாட்டியது. அமைதியைத் தேடி ஓர் ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கு சில காலம் தங்கிவிட்டு ஊர் திரும்பினார். மனிதர், மிகவும் அமைதியாகக் காணப்பட்டார். யாராலும் இவரை கோபப்படுத்த முடியவில்லை. அவரிடம் ஏற்பட்டுள்ள இந்தப் பெரிய மாற்றத்தைக் கண்டு அக்கம்பக்கத்தார் வியந்தனர். ஒருநாள் ஒரு வயதானவர் அவரை அணுகி, தம்பி, உன்னிடம் இவ்வளவு பெரிய மாற்றத்தை நான் மட்டுமல்ல, இந்த ஊரில் எல்லாருமே பார்க்கிறோம், இது எப்படி சாத்தியமானது என்று கேட்டார். அதற்கு அவர் இவ்வாறு பதில் சொன்னார். நான் ஒவ்வொரு நாளும் காலையில் படுக்கையைவிட்டு எழும்போது, கடவுள் எனக்கு இந்த நல்ல நாளைக் கொடுத்திருக்கிறார் என்று நினைத்துக் கொள்கிறேன். இன்று எனக்கு முன்பாக இரண்டு விருப்பங்கள் உள்ளன. ஒன்று நான் கோபப்படலாம். மற்றொன்று நான் கோபப்படக் கூடாது. அதில் நான் இரண்டாவதைத் தேர்ந்தெடுப்பேன். அதையே நாள் முழுவதும் நான் சொல்லிக் கொண்டிருப்பேன். இன்று ஒருநாள் நான் கோபம் கொள்ளக் கூடாதென்பதில் உறுதி கொள்வேன். அதையே கடைப்பிடிப்பேன். என்ன பிரச்சனை நேர்ந்தாலும், இந்த ஒருநாளாவது கோபப்படக் கூடாது. நாளை ஒருவேளை கோபம் வரலாம். ஆனால் நிச்சயம் இன்று அது நடக்கக் கூடாது என்று பதில் சொன்னார் அந்த மனிதர்.

இளையோரே, நான்தான் எனது கோபத்திற்கு பொறுப்பாளி என்பதை உணர்ந்து, அதற்கு உங்கள் மனதில் இடம் அளிக்காதவரை, அதனால் உங்களை ஒன்றுமே செய்ய முடியாது. கடுஞ்சொல் சினத்தை எழுப்பும். கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும்.

2019 புதுவருட நல்வாழ்த்துக்கள்

# தியாகத் தீபம்

பிரான்ஸ் நாட்டிலுள்ள நற்போனில், செபஸ்தியார் உயர்குடும்பத்தில் பிறந்தார். மிலானில் கல்வி கற்று 283ஆம் ஆண்டில் உரோமைப் பேரரசன் கறினுசின் படையில் சேர்ந்து சிறந்த படைவீரர் ஆனார். தன் உடைமைகளையும், பதவியையும், தன் கிறிஸ்தவ வாழ்வைவிட இரண்டாம் தனமாகவே கருதினார். அவர் வாழ்ந்த காலம் வேதகலாபனை காலம். சிறையில் அடைப்பட்டு நொந்தவர்களுக்கு ஆறுதல்கூறி தொண்டு செய்வதே தன் கடமையாகக் கொண்டார்.

ஏற்கெனவே செபஸ்தியாரால் வேதத்தில் சேர்ந்திருந்த மாற்குஸ், மார்செலியானுஸ் என்ற இரு சகோதரர்கள் சிறை வேதனையால் வேத விசுவாசத்தை கைவிடும் நிலையில் இருந்தனர். இதை அறிந்த செபஸ்தியார், உடனே அங்கு விரைந்தார். ஆவியினால் தூண்டப்பட்டு அருள்வாக்கு உரைத்தார். செவிமடுத்த சகோதரர்கள் விசுவாசத்தில் உறுதிகொண்டனர். இயேசு ஏழு தூதர்களுடன் அவர்களுக்குத் தோன்றி முத்தி செய்து “என்னோடே கூட இருப்பாய்” என்று சொல்லி சென்றார். ஆறு ஆண்டுகள் ஊமையாக இருந்த சோயே என்ற பெண் அந்நேரம் அங்கு இருந்தார். அவள் சிறை அதிகாரியான நிகோஸ்கிராத்துவின் மனைவி. செபஸ்தியாரின் பாதங்களைப் பற்றினாள். அவளுக்காக செபிக்கத் தொடங்கி அவள் வாயில் சிலுவை வரைந்தார் செபஸ்தியார். வாய் திறக்கப்பட்டு பேசத் தொடங்கினாள். அவள் மனம்மாறி கிறிஸ்தவ மறையில் சேர்ந்தாள். அவள் கணவன் சூலை நோயால் துன்பப்பட்டான். போதனையின் முடிவில் கிறிஸ்தவன் ஆனான். நோய் நீங்கியது.

நாட்கள் நகர்ந்தன. உரோமைப் பேரரசனுக்கு எவராலும் குணப்படுத்த முடியாத நோய் வந்தது. சூலை நோயிலிருந்து நிவாரணம் பெற்ற நிக்கோஸ்கிராத்துவைக் கண்டு பாவித்து கிறிஸ்தவ மறையில் தன் மகனுடன் சேர்ந்தார். செபஸ்தியாரின் வேண்டுதலால் பிணி நீங்கியது. சிறையில் அடைப்பட்டு கிடந்த 1400 புதுக் கிறிஸ்தவர்களை பேரரசன் விடுவித்தான். கிறிஸ்தவர்களுக்கு சுபிட்சம் வந்தது. இந்நிலை நெடுநாள் நீடிக்கவில்லை.

283ல் தியோக்கிலேசியன் உரோமைப் பேரரசன் ஆனான். செபஸ்தியாரின் நற்பண்புகளாலும் நெஞ்சுறுதியாலும் கவர்ந்திழுக்கப்பட்டு அவரை தன் மெய்க்காப்பாளராக ஆக்கினான்.

இவ்வேளை காய்யூஸ் என்ற திருத்தந்தையிடம் செபஸ்தியார் அறிமுகப்படுத்தப்பட்டார். தியோக்கிலேசியன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். மெய்க்காப்பாளராக இருந்துகொண்டே கிறிஸ்தவர்களுக்காக போராடும்படி திருத்தந்தை கேட்க செபஸ்தியார் இசைந்தார்.

286ல் வேத கலாபனை உச்சக்கட்டத்தை அடைந்தது. திருந்தந்தையும், கிறிஸ்தவர்களில் பலரும் அரண்மனைக் காவலன் ஒருவன் வீட்டில் மறைந்து வாழக்கூடிய நிலை ஏற்பட்டது. சோயா நெருப்பில் சுட்டெரிக்கப்பட்டாள். மாற்குசின் தந்தை திரன்குவினுஸ், கல்தோரியுஸ், விக்தோரினுஸ் போன்றோர் சித்திரவதைக்கு உட்படுத்திப்பட்டு ஆழ்கடலுள் தள்ளப்பட்டனர்.

தளபதியான புல்பியன், அரசனிடம் செபஸ்தியார் ஒரு கிறிஸ்தவர் என்று கூற அரசன் அதிர்ச்சியடைந்தான். “தன் உப்பைத் தின்று தனக்குத் பிடிக்காத கிறிஸ்தவ மறையில் வாழும் செபஸ்தியார் நன்றி மறந்தவர்” என்று பழி சுமத்தினான் அரசன். “இறைவனின் திருவுளத்திற்கேற்ப நடந்து அரசர்களின் நலனுக்காகப் பாடுபடுவதே என் பணி” என்று செபஸ்தியார் சாந்தமாகக் கூறினார். கோபாவேசம் கொண்ட அரசன் கம்பத்தில் கட்டி அம்புகளால் செபஸ்தியாரைத் துளைக்கும்படி ஆணையிட்டான். அவ்வாறே செய்யப்பட்டது. இறந்தார் என எண்ணி காவலர்கள் போய்விட்டனர். கிரேனாள் என்ற பெண் அடக்கம் செய்யலாம் என நினைத்து, இரவில் வந்து பார்க்க செபஸ்தியார் உயிருடன் இருந்தார்.

இரகசியமாய் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று குணப்படுத்தினாள். குணமடைந்தபின் எவர் சொல்லியும் கேளாது பகிரங்கமாகவே கிறிஸ்தவராக வாழ்ந்து கிறிஸ்தவர்களின் விடுதலைக்குப் போராடினார். ஒரு சமயம் அரசனை எதிர்கொள்ளவே இவர் இன்னும் உயிர் வாழ்வது கண்டு ஆச்சரியப்பட்டு “என் முன் நிற்பது செபஸ்தியாரா?” என்று கேட்டான் அரசன். “நீர் கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறீர் என உலகம் அறியும்பொருட்டு இயேசு என்னை உயிரோடு காப்பாற்றினார்” என்றார் செபஸ்தியார். அரசன் வெகுண்டெழுந்தான், இவரைத் தடிகளால் அடித்துக் கொல்ல கட்டளையிட்டான். இறப்புக்கு முன் தன் வேண்டுதலினால் உரோமையில் பரவிய விஷ நோயும் கிறிஸ்தவர்களின் மத்தியில் நிலவிய வைசூரி, பஞ்சம், கொள்ளை நோயும் நீங்குமாறு செய்தார்.

சேவகர்கள் 288ஆம் ஆண்டு தை 20ஆம் நாள் இவரைப் பிடித்து தடிகளால் அடிக்க மறைசாட்சியாக மரித்தார். லூசினாள் என்ற பெண் இவர் உடலை எடுத்து வந்து புனித இராயப்பர், சின்னப்பர் கல்லறை வாயிலில் அடக்கம் செய்தாள்.



## செபஸ்தியார்

**வேதகலாபனை காலத்திலே**
**வேந்தன் இயேசுவின் வழிநடந்து**
**வேத சாட்சி முடிதரித்த**
**வீர மைந்தனே செபஸ்தியாரே!**

**பரமன் திருமுன் உம் செல்வாக்கைப்**
**பாவியர் எமக்காய் பயன்படுத்தும்,**
**பஞ்சம் அம்மை வந்ததென்றால்**
**பாய்ந்தவை விலகிட அருள்புரியும்.**

**விண்ணக மாட்சிமை பெறத்துடித்து**
**மண்ணகப் பதவியை இழந்தவரே!**
**எண்ணில்லா மாந்தரை மனம்திருப்ப**
**அண்ணலே புதுமைகள் பல புரிந்தீர்.**



“பல்லு போனா சொல்லு போச்சு; என்பார்கள். சொல் போவது இருக்கட்டும், பல்லு போனா பல உடல்நோய்கள் ஏற்படும்.

# பற்களைப் பாதுகாப்போம்

**☛ நல்ல பற்களை எல்லோரும் பெறுவதில்லை, என்ன காரணம்?**

சில நேரங்களில் பரம்பரையாக அந்த அமைப்பு இருக்கும் அல்லது அதை நாம் எப்படிப் பராமரிக்கிறோம்? அதற்காக எவ்வளவு மெனக்கெடுகிறோம்? என்பதை பொருத்தும், பெற்றோர்களுக்கு ஏதாவது பற்களில் பிரச்சினை இருந்தால் அது பிள்ளைக்கும் வர வாய்ப்பு உண்டு.

**☛ சீரான பற்கள் இல்லை என்றால் நாம் அறுவைச் சிகிச்சை [Surgery] மேற்கொள்ளலாமா?**

எல்லா நேரங்களிலும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள முடியாது. மருத்துவரிடம் சென்றால் பற்களில் என்ன பிரச்சினை என்பதைப் பார்த்து அதற்கு ஏற்றாற்போல் அறுவைச் சிகிச்சை வேண்டுமா, வேண்டாமா என்று சொல்வார்கள். சில பேருக்கு கிளிப் (Clips) போட்டுக்கூட சரி பணணலாம்.

**☛ பற்களில் Clips போடுவதால் பற்களில் கறை ஏற்பட வாய்ப்பு உள்ளதா?**

கறைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. ஆனால், அதன் மேல் பாலிஷ் போட நம்மிடம் வழிமுறைகள் உள்ளது.

**☛ பற்களின் ஈறுகளில் இரத்தம் கசிவதைத் தடுக்க என்ன வழி?**

இரத்தம் கசிவதை பயோரியா (pyorrhea) என்று சொல்வார்கள். இது மிகவும் அதிகமாக பற்களைச் சேதப்படுத்தும்போது சீழ்பிடிக்கும். இரத்தம் வரும். ஈறுகளில் சில பேர் பற்கள் தேய்க்கும்போது பிரஷ் பட்டு இரத்தம் வருவதாக நினைப்பார்கள். ஆனால், அதுவும் காரணமாக இருக்கலாம். பற்களை அடிக்கடி சுத்தம் பண்ண வேண்டும். பற்களைச் சுத்தம் பண்ண இரண்டு வகை உள்ளது. ஒன்று, ஈறுகளைச் சுத்தம் பண்ணுவது. மற்றொன்று, சாதாரணமாக ஸ்கேலிங் (Scaling) சுத்தம் பண்ணுவது.

**☛ பற்களை பலப்படுத்தும் உணவு வகைகள் எவையெவை?**

எப்போதும் உண்ணும் உணவையே எடுத்துக் கொள்ளலாம். இரண்டு முறை பல் துலக்க வேண்டும். இரண்டு முறை பல் துலக்குபவர்களின் குடும்பத்தினரிடம் அந்தப் பழக்கம் இருப்பதால் அவர்களது பற்களில் பிரச்சினை வருவது மிகவும் குறைவு. கொய்யப் பழங்களைச் சாப்பிடலாம். 16 டம்ளர் பாலில் இருக்கும் கால்சியம் ஒரு கொய்யாப்பழத்தில் இருக்கிறது. 8 டம்ளர் பாலில் இருக்கும் கால்சியம் ஒரு கொய்யாப்பழத்தில் இருக்கிறது. நிறைய பேர் கேட்கும் கேள்வி நம் பற்களை எவ்வளவு வருடம் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளலாம்? என்று. உற்றுப்பார்த்தால் பண்டைய காலத்து மனிதர்களின் பற்கள் இன்றும் அப்படியே இருக்கும். பல வருடங்களுக்கு முன்பு இருந்தவர்களின் பற்கள் ஆரோக்கியமாக இருக்கும் போது நம்முடைய பற்களையும் கால்சியம் சத்து அதிகமாக இருக்கும் உணவுகளை எடுத்துக் கொண்டால் ஆரோக்கியமானதாக பலம் உள்ளதாக வைக்க முடியும். பற்களை நாம் ஒழுங்காகப் பராமரிக்காததால்தான் அதிக சேதம் ஏற்படுகிறது. நீண்ட காலம் நம் பற்கள் பலமாக இருப்பது நம்மிடம்தான் உள்ளது.

**☛ பற்களின் ஆயுள்காலம் எவ்வளவு?**

பற்களின் ஆயுள் காலத்தைத் தீர்மாணிப்பது நமது பராமரிப்புகளில் தான் உள்ளது. வருடத்திற்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் சென்று நம் பற்களைப் பார்த்து சரி பண்ணுவது அவசியம். ஏன் ஒரு வருடத்திற்கு ஒன்று கேட்டால், பல் மருத்துவரான எனக்கே பற்களில் பாதிப்பு ஏற்பட்டால் நான் மற்றொரு பல் மருத்துவரிடம் சென்று சோதித்துப் பார்க்க வேண்டும். அதில் சொத்தை ஏற்பட்டு வீக்கம் ஏற்பட்டிருக்கும் என்றால் அதை பல் மருத்துவரால் மட்டும்தான் கூறமுடியும்.




**☛ சரியான பிரஷ்ஷை எப்படித் தேர்ந்தெடுப்பது?**

சரியான பிரஷ் என்பது மீடியம் அல்லது சாப்ஃட் பிரஷ்ஷைப் பயன்படுத்தலாம். மேல் தாடை பற்களை கீழிருந்து மேலாகவும், கீழ்தாடை பற்களை மேலிருந்து கீழாகவும் துலக்க வேண்டும்.

**☛ எத்தனை மாதங்களுக்கு ஒருமுறை பல் துலக்கும் பிரஷ்ஷை மாற்ற வேண்டும்?**

ஒரு பிரஷ்ஷை 45 நாட்கள் மட்டும் பயன்படுத்தலாம். அதற்கு மேல் பயன்படுத்தினால் அது ஆரோக்கியமானதாக இருக்காது.

**☛ பல் எடுத்த பின் செயற்கை பல் பொருத்துவது அவசியமா?**

32 பற்களில் ஒரு பல்தானே கீழே விழுந்தது என்று அப்படியே விட்டுவிடக்கூடாது. ஒரு பக்கம் பல் இல்லை என்றாலும், நாம் மறுபக்கம் அதிகம் பயன்படுத்துவோம். அப்படி வலதுபுறம் பல் இல்லை என்று இடதுபுறப் பல் கடித்துப் பழக ஆரம்பித்தால் காதின் அருகில் இணைப்பு இருக்கும். அதன் மீது ஒரு தேய்மானம் ஏற்படும். அதனால் தான் பல் இல்லாதவர்களுக்கு காது கேட்பதில் சிறு பாதிப்பு ஏற்படும். அதுபோன்று மேல் பல் எடுத்துவிட்டோம் என்றால் கீழ் பல் மேலே ஏறிவிடும். கீழ் பல் எடுத்துவிட்டோம் என்றால் மேல் பல் எடுத்தவுடனே வேறு பல் பொருத்த வேண்டுமென்று கூறுகிறோம்.

**☛ பாட்டிலைத் திறக்க மூடியைக் கடித்து இழுப்பார்கள். நூலை அறுக்கக்கூட வாயால் கடிப்பார்கள். இதனால் பற்கள் சேதமடைய வாய்ப்பு உள்ளதா?**

பற்களால் கம்பி மற்றும் வயரைக்கூட கடித்து இருப்பார்கள். அவர்களின் வேலையின் நிமித்தம் இவ்வாறு செய்வார்கள். அதனால் பற்கள் அதிகம் பாதிக்கப்படலாம். எனாமல் எவ்வளவோ சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் பாதிப்பு ஏற்படும். சொத்தைப் பல் இருந்தால் அதிக பாதிப்பு ஏற்படும்.

தொடரும்....

## 01 சமாதான நீதவான்

சத்தியபிரமாணம் செய்து கொண்டார்.

அருட்தந்தை 1976ம் ஆண்டு மார்கழி மாதம் 22ம் திகதி கண்டியில் பிறந்தார். இவர் கிளரீசிய துறவற சபையில் இணைந்து 2011ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். குறிப்பாக புனித கிளாரட் தோட்டம், மத்துக என்னுமிடத்தில் பணிபுரிந்த அருட்தந்தை களுத்துறை மாவட்ட பெருந்தோட்ட மக்களுக்கு அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளார். தற்போது கண்டி கிளாரட் குருமட நிதிப்பொறுப்பாளராக பணிபுரியும் அருட்தந்தை தமிழ் மக்களின் ஆன்மீக தேவைகளை நிறைவேற்றி வரும் ஆன்மீக குருவாக விளங்குகின்றார்.

ஆன்மீக வழிகாட்டுதலுடன் ஏழை பாமர மக்களுக்காக தனது நேரங்களை செலவு செய்து வேலை புரியும் இந்த அருட்பணியாளரின் பணிகள் சிறக்க நாம்... வாழ்த்துவோம். ஒரு இளங் தமிழ் குருவானவர் தமிழ் மக்களின் தேவையினை அறிந்து ஓயாது சேவை புரிந்து வருவது களுத்துறை பெருந்தோட்ட மக்களிடையே ஒரு விசுவாத்தினையும், ஆன்மீக தாகத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. அருட்தந்தையின் பணி தொடர வாழ்த்துக்கள்.

**தகவல் : அருட்சகோ. டிலோயிட்சன் பர்னாந்து, கண்டி, தேசிய குருமடம்**

## 06 புதிய பார்வையில்...

“விக்ரம் சார், நான் வருந்துகிறேன். சனிக்கிழமை நடந்ததுபோல் நான் நடந்திருக்கக்கூடாது” என்றார்.

இளைஞனுக்குச் சொல்லமுடியா ஆச்சரியம். கண்ணீர் கண்களில் வடிந்தது. எழுந்து நின்று என்னை அணைத்து தட்டிக்கொடுத்தார். உடன்வேலை செய்கிறவர்கள் எல்லாரும் கேள்விப்பட்டு அதிக ஆச்சிரியப்பட்டனர். நாம் அச்சமூட்டும் சூழ்நிலையைக் கண்டு பயப்படவேண்டியதே இல்லை. பயத்துக்கும் நாம் ஆட்படாத வரை பயம் நம்மைப் பயப்படுத்தவே முடியாது. பயத்தை துணிவுடன் சந்திப்பதே பயத்தை மேற்கொள்வதற்கான சிறந்த வழி.

## 07 விவிலிய வாசிப்பு

(வச 28). எனவே இறைவன் உலகின்மீது அதிகாரம் கொண்டிருக்கிறார் என்பதைக் காணக்கூடிய விதத்தில் மானிடர் செயல்படுத்துவதற்குத்தானே ஒழிய அந்த இயற்கையை அழிப்பதற்கும், சுரண்டுவதற்கும் அல்ல, மானிடரின், விலங்குகளின் உணவுக்கு நிலத்தினின்று விளையும் பொருட்களையே தந்தார். (வச 29-30) இதனால் மனிதர் ஒருவர் ஒருவரையோ, விலங்குகளையோ அடிப்பதோ, கொல்வதோ இறைத்திட்டத்தில் இல்லை என்பது தெளிவாகிறது. ஆக, உலகத் தோற்றத்தில் பகைமை, கொலை, கொள்ளை இல்லாத அமைதிப் பூங்காவாக உலகம் திகழ்ந்தது என்பதற்கு இது ஒரு சான்று. இத்தகைய ஓர் அமைதி நிலைதான் மெசியாவின் காலத்திலும் இருக்கும் என எசாயா கனவு கண்டார் (எசா 65:25) இதுவும் விவிலியம் காட்டும் அழகியலில் ஓர் உன்னநிலை.

**தொடரும்**

## 09 ஆண்டவரின் திருமுழுக்கு.

தீய வாழ்வையும் நாம் விட்டுவிட வேண்டும். சாத்தான் இருக்குமிடத்தில் இயேசுவுக்கு இடமில்லை. ஆகவே நாம் பெற்ற திருமுழுக்கின் அருள் நம்மை பாவத்திலிருந்து, பாவச்சோதனையிலிருந்து தூர விலகச் செய்கிறது.

திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட கடவுள் அருளின்படி வாழ்வதற்கு நம் விசுவாசம் இன்றியமையாதது. மூவொரு கடவுளையும், அவர்களின் செயற்பாட்டையும், அருட்சாதனங்கள் மூலம் நாம் பெறும் இறைக்கொடைகளையும், விசுவசிக்க வேண்டும். நாம் வாழ்ந்து காட்ட வேண்டிய கடவுளில் மீதுள்ள அசைக்க முடியாத, ஆழமான விசுவாசத்தை அறிக்கையிடுவதோடு மட்டுமல்லாமல் அன்றாட வாழ்வில் வெளிப்படுத்தி, இறையரசு பணியை ஆற்றும்போதுதான் நாம் திருமுழுக்கு அருள் நம்மில் நிறைபலன் தரும்.

## 10 விவிலியப்பகுதி

**விடைகள்**

1. பதின்நான்கு
2. இயேசு
3. கடவுள் நம்முடன் இருக்கிறார்.
4. யூதாவிலுள்ள பெத்லகேம்
5. ஏரோது அரசன்
6. விண்மீன்
7. பொன்னும், சாம்பிரானியும், வெள்ளப் போளமும்
8. எகிப்துக்கு
9. 2 வயதுக்கு உட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான்.
10. நசரேத் தூரில் வாழ்ந்தனர்.

## 05 திருக்காட்சிப் பெருவிழா...

அமெரிக்க நாடுகளைப் பார்த்து சிரியா, ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பெண்களை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததோடு மட்டுமல்லாமல், தென் இத்தாலியின் சரபாவோ தீவில் ஆப்பிரிக்க அகதிகள் நுழைந்தபோது அவர்களை அனுமதித்தார். அவர்களை முகாமில் சென்று சந்திக்கிறார். சமீபத்திலே மியான்மரிலிருந்து பெரும்பான்மை புத்த மதத்தவர்களால் அகதிகளாக வங்காள தேசத்திற்கு விரட்டியடிக்கப்பட்ட ரோகிங்கியா முஸ்லீம் அகதிகளை மியான்மர், வங்காள தேசத்தில் சந்திக்கிறார். வத்திக்கானில் கூட சாந்தா மரியா சிற்றாலயத்தில் ஒவ்வொரு நாளும் வத்திக்கான் பணியாளர்கள், பல்வேறு சபைகளைச் சார்ந்த குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்களுக்கு திருப்பலி நிறைவேற்றி செபித்தார். குளிரில் வாடிய தெருவில் வசிப்பவர்களுக்கு படுக்கையும், எல்லா மதத்தினருக்கும் செபமாலையையும் பரிசாக வழங்கினார்.

நம்முடைய திருத்தந்தை அவர்களைப்போல எல்லாம் கடந்த, எல்லாருக்கும் உதவுவோம், எல்லாரும் கடவுளுக்கு உரியவர்கள், பிள்ளைகள் என்பதை உணர்ந்து அன்பு செய்வோம். ஏழைகளுக்கு, தேவையில் உழல்வோருக்கு நாம் செய்கின்ற சிறு உதவி அன்பான, ஆறுதலான வார்த்தை கீழ்த்திசை ஞானியரின் பரிசுகளாகிய இயேசுவின் அரசுத் தன்மையைக் குறிக்கும் பொன், இறைத்தன்மையைக் குறிக்கும் சாம்பிராணி, மனிதத் தன்மையைக் குறிக்கும் வெள்ளைப்போளம் ஆகியவற்றைவிட மேலானது. பொருள்களை மட்டுமல்ல, நம்மையே பிறருக்குப் பரிசாக்குவோம். இறைவன் நம்மை ஆசீர்வதிப்பார்!.

எமது இணையத்தள முகவரி
http://www.colomboarchdiocesancatholicpress.com



புதுவருட நல்வாழ்த்துக்கள்

# திருத்தந்தையின் நத்தார் செய்தி

கலிலேயாவில் யாரும் அறியாத ஒரு சிறு கிராமத்தில் உலகிற்கு அறிமுகதாகாத ஓர் இளம்பெண்ணின் உள்ளத்தில், உலகை ஒளி மயமாக்கும் மகிழ்சை இறைவன் ஏற்றி வைத்தார் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இறைமகனை மகிழ்வுடன் வரவேற்க இளம்பெண் மரியா பெற்ற அதே அழைப்பு இன்று திருஅவை முழுமைக்கும் வழங்கப்படுகிறது. இறைவனை நம் உள்ளத்தில் வரவேற்றால் எந்தக் கவலையும், அச்சமும் நம் உள்ளத்து அமைதியைக் குலைத்துவிடாது.

“மகிழ்வு, செபம் மற்றும் நன்றியுணர்வு” என்பன கிறிஸ்து பிறப்பு விழாவை அனுபவிக்க நம்மையே தயாரிக்கும் மூன்று விடயங்கள் எனவும் திருத்தந்தை தனது நத்தார் செய்தியிலே தெரிவித்தார்.

# மரியாவும் யோசேப்பும் வெளிப்படுத்திய வியப்பும், ஆதங்கமும்



12 வயது சிறுவன் இயேசுவை இழந்து, அன்னை மரியாவும், யோசேப்பும் அடைந்த மூன்று நாள் துன்பம், இறைவனை விட்டு விலகிச் செல்லும் நேரங்களில், நாம் உணரவேண்டிய துன்பம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஞ்ஞாயிறு வழங்கிய மூவேளை செப உரையில் கூறினார்.

டிசம்பர் 30, இஞ்ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்ட திருக்குடும்பத் திருவிழாவன்று, புனித பேதுரு பசிலிக்கா பேராலய வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகளுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை, திருப்பலியில், வழங்கப்பட்ட நற்செய்தியை மையப்படுத்தி, தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

மூன்று நாள் தேடலுக்குப் பின் எருசலேம் கோவிலில் சிறுவன் இயேசுவைக் கண்ட மரியாவும், யோசேப்பும், தங்கள் மகன், போதகர்கள் நடுவே அமர்ந்து பேசியதைக் கண்டு, அவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர் (லூக்கா 2:48) என்று நற்செய்தியில் கூறப்பட்டுள்ளதை, தன் மூவேளை செப உரையில் சிறப்பாகக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வியப்பு என்ற பண்பு, நம்மைச் சுற்றி நடப்பதை, திறந்த மனதுடன் அணுகும் பக்குவத்தை வெளிப்படுத்துகிறது என்று கூறினார்.

இயேசுவைக் காணாததால், மரியாவும் யோசேப்பும், ஆதங்கத்துடன் அவரைத் தேடினர் என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, நம் வாழ்வில், செபிக்காமல், நற்செய்தியை வாசிக்காமல், மூன்று நாள்கள் செலவழித்தால், இயேசு நம் வாழ்விலும் காணாமல் போய்விடுவார் என்றும், அவ்வேளையில், அவரை நாம் ஆதங்கத்துடன் தேடவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

வியப்பு, ஆதங்கம் என்ற இரு சொற்களை நாம் இன்று நம் இல்லங்களுக்கு கொண்டு செல்வோம் என்று தன் மூவேளை செப உரையின் இறுதியில் கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பல்வேறு காரணங்களுக்காக, அமைதியையும், புரிதலையும் இழந்து தவிக்கும் குடும்பங்களுக்காக செபிப்போமாக என்று தன் உரையை நிறைவு செய்தார்.

# அன்பு இருக்குமிடத்தில் அனைத்தும் இருக்கும்

அன்று, ஒரு பெண் தன் வீட்டிலிருந்து வெளியே வந்தார். வீட்டிற்கு வெளியே முற்றத்தில் மூன்று வயது முதிர்ந்தவர்கள் நீண்ட வெள்ளைத் தாடியுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாகத் தெரிந்தனர். எனவே அப்பெண் அவர்களிடம், உங்களை யார் என எனக்குத் தெரியாது. ஆனால், நீங்கள் பசியால் மிகவும் களைத்திருக்கிறீர்கள். ஆதலால் எங்கள் வீட்டுக்குள் வந்து முதலில் சாப்பிட்டு களைப்பைப் போக்குங்கள் என்றார். அதற்கு அந்த முதியவர்கள், இந்த வீட்டுத் தலைவர் உள்ளே இருக்கிறாரா எனக் கேட்டார்கள். இல்லை என அப்பெண் சொல்ல, அப்படியானால் நாங்கள் வீட்டுக்குள் வர இயலாது என்று அம்மூவரும் சொல்லிவிட்டனர். மாலையில் கணவர் வீடு திரும்பியதும் நடந்ததைச் சொன்னார் மனைவி. அவர்களை உள்ளே வரச்சொல் என கணவர் சொல்ல, அப்பெண்ணும் அம்மூவரையும் வீட்டிற்குள் அழைத்தார். அதற்கு அவர்கள், நாங்கள் மூவரும் ஒன்றாகச் செல்வதில்லை என்றனர். அதற்குக் காரணம் என்னவெனக் கேட்டார் அப்பெண். அப்போது ஒரு முதியவர், தன்னை செல்வம் என்றும், அடுத்தவரைச் சுட்டிக்காட்டி இவர் வெற்றி என்றும், மூன்றாமவரைக் காட்டி இவர் அன்பு என்றும் அறிமுகப்படுத்தினார்.

அதைக் கேட்ட அப்பெண் மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் சென்று, தன் கணவரிடம் அம்மூவர் பற்றியும் சொன்னார். சரி அப்படியானால் செல்வத்தை வரவழைப்போம் என்றார் கணவர். இல்லை, வெற்றியை வரவழைப்போம் என்றார் மனைவி. இந்த உரையாடலை வீட்டின் ஒரு மூலையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அவர்களின் மகள் ஓடிவந்து, அன்பை அழைப்பது நல்லதல்லவா? அப்போது நம் வீடு முழுவதும் அன்பால் நிறைந்திருக்கும் என்றாள். இந்த ஆலோசனையை ஏற்ற கணவர், சரி போய் அன்பை நம் வீட்டு விருந்தாளியாக அழைத்து வா என்றார். அப்பெண்ணும் வெளியே சென்று, உங்களில் அன்பு யாரோ அவர் எம் வீட்டிற்கு விருந்தினராக வரலாம் என்றார். அன்பு முதலில் நடக்கத் தொடங்கியதும், மற்ற இருவரும் அவரைப் பின்தொடர்ந்தனர். அப்பெண் வியந்து அன்பைத்தானே நான் கூப்பிட்டேன் என்று கேட்க, நீ, செல்வத்தையோ வெற்றியையோ அழைத்திருந்தால் யாராவது ஒருவர்தான் வந்திருப்போம். ஆனால் அன்பை அழைத்ததால் நாங்கள் அவரைப் பின்தொடர்ந்தோம். அன்பு செல்லுமிடத்திற்கு நாங்கள் இருவருமே செல்வோம் என்றார்கள்.

# புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை ஆலய



## பங்கு மண்டபத் திறப்புவிழா

**MATER DOLOROSA PARISH HALL**



**13. தை 2019**

**காலை 8.00 மணித் திருப்பலியைத் தொடர்ந்து**

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்**

**ஆண்டகையின் தலைமையில் திறந்துவைக்கப்படும்.**

பங்குத்தந்தை
பங்குமக்கள்

(N4907)

---

# மகாகல்கமுவ

**புனித யோசப்வாஸ் அடிகளாரின் தேசிய யாத்திரை ஸ்தலத்தின் சரித்திர புகழ்மிக்க வருடாந்த திருவிழா**

**2019 ஜனவரி 15 காலை 9.00 மணி**



**வருடாந்த திருவிழா திருப்பலி (தமிழ் சிங்கள மொழிகளில்)**
**எமது மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஹரல்ட் அன்தனி பெரேரா**
**ஆண்டகையின் கௌரவ அழைப்புடன்**
**யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஜஸ்டின் பெர்னாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகையால் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

கொடியேற்றம் மற்றும்

| | | |
|---|---|---|
| முதலாம் நவநாள் | 2019.01.11 | மாலை 4.00 மணி |
| இரண்டாம் நவநாள் | 2019.01.12 | மாலை 5.00 மணி |
| மூன்றாம் நவநாள் | 2019.01.13 | மாலை 5.00 மணி |
| மாலை ஆராதனை | 2019.01.14 | மாலை 6.30 மணி |
| திருவிழா திருப்பலி | 2019.01.15 | காலை 9.00 மணி |

**உட்புகும் பாதை**

- **கொழும்பு நீர்கொழும்பிலிருந்து**
  கிரிவுல்ல ▸ கழுகமுவ சந்தி ▸ வாரியபொல ▸ பாதெனிய ▸ தலதாகம ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ
- **கண்டி குருணாகலிருந்து**
  குருணாகல் ▸ வாரியபொல ▸ பாதெனிய ▸ தலதாகம ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ
- **யாழ்ப்பாணம் மன்னாரிலிருந்து**
  அநுராதபுரம் ▸ தலாவ ▸ தம்புத்தேகம ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ
- **புத்தளம் சிலாபத்திலிருந்து**
  ஆனமடுவ ▸ நவகத்தேகம ▸ நான்னேரிய ▸ கல்கமுவ ▸ மகாகல்கமுவ

**யாத்திரை ஸ்தல பரிபாலகர் அருட்பணி அலெக்ஸ் ஜானக, புனித யோசப்வாஸ் மன்றம், பங்குமக்கள்**

**தொலைபேசி இலக்கம் 077 0665616 / 037 2253095 / 0373126565**

(Q18N6772)

---

## கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

**பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.**

**தொடர்புகொள்ளுங்கள்**
இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com













| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்